விலை ரூபா 1—50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 10 துல்ஹஜ் 30 இதழ் 180

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-8-1987

## 'காலிஜ்டைம்ஸ்' பத்திரிகை செய்தி:
# பிரதமர் முழுமையாக மறுப்பு!

[கொழும்பு]

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாக பிரதமர் ஆர். பிரேமதாசா டுபாய் ஆங்கில வார ஏடான 'காலிஜ் டைம்ஸ்' பத்திரிகைக்கு பேட்டியொன்று அளித்ததாக வெளிவந்த செய்தியை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பிரதமரின் செயலகத்திலிருந்து வெளியான அறிக்கையொன்றில் குறித்த பத்திரிகைக்கு பிரதமர் எவ்வித பேட்டியும் அளிக்கவில்லை என்று

(9-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் நடந்த மக்கள் பேரணி:
## 10,000 பேர் கலந்துகொண்டனா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று பக்கள் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

சுமார் 10,000 பேர் கலந்து கொண்ட இப்பேரணி, மட்டக்களப்பு காந்திசிலை அருகே ஆரம்பித்து ஊர்வலமாக அடைந்து, மீண்டும்காந்திசிலையடிக்கு வந்து முடிவுற்றது.

ஊர்வலத்தில்கலந்துகொண்

(9ம் பக்கம் பார்க்க)



ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் மாபெரும் பொதுக்கூட்டம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது முன்னணியின் பிரமுகர்கள் திரு. ராஜன், திரு. எம். கனகராஜன், திரு. மனோகரன் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் திரண்டிருந்த மக்களில் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம்.

# நிவாரண உதவியில் தில்லுமுல்லு

## ஒரு லட்சம் கிலோ சீனி திடீர் மறைவு?

(யாழ்ப்பாணம்)

**இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்படைந்த யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரண உதவியாக இந்தியா வழங்கிய ஒருலட்சம் கிலோ சீனிக்கு என்ன நடந்தது?**

**சீனியின் 'மர்ம மறைவு' பற்றி பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பெரும் கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.**

**நிவாரணஉதவி வழங்கியதில் 'திரைமறை'வில் 'தில்லுமுல்லு' நடந்ததாக பொதுமக்கள் கூறுகின்றனர்.**

யாழ். நகரிலுள்ள ஐந்து கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்கு வழங்கப்படவிருந்த இந்திய நிவாரணப் பொருளான சுமார் ஒரு லட்சம் கிலோ சீனி யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடைக்காததினால் மக்களுக்கு வழங்கப்படவில்லை. புளி, பால்மா, தீப்பெட்டியும் கூட வழங்கப்படவில்லை

யாழ். ப. நோ. கூட்டுறவு சங்கத்திற்கு சுமார் ஒரு லட்சத்து நாலாயிரம் கிலோ இந்திய நிவாரண சீனி பெறுவதற்கு 'ஓடர்' வழங்கப்பட்டிருந்தது. இந்தச் சீனியைப் பெறுவதற்காக சங்கத்தினர் அரச களஞ்சியத்திற்குச் சென்றபோது அங்கு சீனி இல்லை என்று கைவிரித்துவிட்டனர்.

இதேபோல் புளி, பால் மா, தீப் பெட்டியும் கிடைக்கவில்லை.

சோனகதெரு. வண். தென் மேற்கு, வண். தென் கிழக்கு, குருநகர், யாழ் நகர்ப்பகுதிகளிலுள்ள 20 கிளைகள்மூலமும் உத்தரவுபெற்ற வியாபாரிகள் மூலமும் இந்திய நிவாரணப் பொருள் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது

அரிசி, மா, சீனி, பால்மா,

(9ம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

ரவீந்திராஸ்

எமது ஸ்தாபனம்

இம்மாதம் இருபத்திஆறும் திகதி (26-8-1987) இன்று புதன்கிழமை

முதல்

இல: 46, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

என்ற இடத்தில்

மீண்டும் ஆரம்பிக்கின்றோம்.

இவ் அறிவித்தலை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

[சி-0611]

## 'அமிர்' 60-வது பிறந்தநாள்!

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தமது 60வது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றார்

(9ம் பக்கம் பார்க்க)

## காஞ்சி பீடாதிபதியை காணவில்லை!

(சென்னை)

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை என்றும் அவரை கண்டுபிடிக்க பொலிசார் பெருமளவில் தேடுதல் நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

## வடக்குகிழக்கில் மீண்டும் சிங்களக் குடியேற்றத்திற்கு அரசு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேறிய சிங்களவர்களை மீண்டும் இப்பகுதியில் குடியமர்த்த அரசாங்

(9ம் பக்கம் பார்க்க)

## இன்று சிவகுமாரன் நினைவுதினக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பொன் சிவகுமாரனின் பிறந்தநாளை நினைவுகூரும் பொதுக்கூட்டம் உரும்பராயில் இன்று புதன்கிழமை மாலை திரு. க. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும். கவிஞர்

[9ம் பக்கம் பார்க்க]

## "ஈழ. தே. ஜ. வி. முன்னணி விரைவில் ஆயுதங்களை ஒப்படைக்கும்

### 'திரீஸ்ரார்' என்று இயக்கம் எதுவுமில்லை" — ராஜன்.

(அலுவலக நிருபர் எம் வாமதேவன்)

"இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு உறுதியளித்தபடி மிக விரைவில் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தனது ஆயுதங்களை ஒப்படைக்கும். ஆயுதங்கள் முல்லைத்தீவு, வவுனியா மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வைத்துக் கையளிக்கப்படும்."

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணிப் பிரமுகர்திரு. ராஜன் "ஈழநாடு"வுக்கு நேற்று அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

'புளட்' அணியிலிருந்து பிரிந்தவர்களால் அமைக்கப்பட்டதே ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியாகும்.

அந்த பேட்டியில் திரு. ராஜன் மேலும் தெரிவித்ததா

(9ம் பக்கம் பார்க்க

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் ½ பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 18, ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணம். சி 0555

60 அடி நீளம் 45 அடி அகலமுள்ள தொழிற்சாலைக் கட்டிடம், தகரம், மரம், சிமெந்துக் கற்கள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: பாலசிங்கம், 'பிருந்தாவனம்'' நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [சி 0597]

ஜோஸ்யரின் சனிமாற்றம் இருபதிப்புக்ளும் விற்பனையாகி விட்டன விற்பனைக்கு வருகின்றது. எண்பத்தெட்டும் இராசிப்பலனும். ஒப்செட் வர்ணப்பதிப்பு. விலை மூன்று மட்டுமே. பூபாலசிங்கம், புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-0617]

புன்னாலைக்கட்டுவன் மயிலங்காட்டு வீதியில் பலாலி வீதியில் இருந்து 1/4 மைல் தூரத்தில் 20பரப்பு தோட்டக்காணி (தளையன்கலட்டி] விற்பனைக்குண்டு மற்றும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். நாகமுத்து தம்பிராசா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னுகம். (ஏ 0625)

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட மிருதங்கம் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: K. பெரியபிள்ளை உடுவில் வீதி, மானிப்பாய் (ரேஸ் பான்ட் இனிப்பு தொழிற்சாலைக்கு முன்பாக) சி-0627

திருமண அழைப்பிதழ்கள், திருமண, பிறந்தநாள் வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள "அரஸ் ஜவுளியகம்'', 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24001. [சி-0129)

Nallur Farm Center பெருந்தொகையான தரமான முட்டையிடும் இனங்களான Prima Farm "Lohmann'' Christombu Farm "Golden Comets'' சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் நியாயமானவிலைக்கு ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-0382

G. C. E. O/L மாணவர்களுக்கான கடந்தகால வினு-விடைப்பயிற்சிகள், 8 வருட பயிற்சிகள் எல்லாப் பாடங்களிலும் விலைரூபா 25/- பூபாலசிங்கம்புத்தகசாலை, ஸ்ரீ லங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக பெறுவோருக்கு 15% கழிவு தரப்படும். அஸ்ரன் பதிப்பகம், 16/1, ஆஸ்பத்திரிவீதி, [A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ம் மாடி] யாழ்ப்பாணம். [சி0356]

பழைய, புதிய வீட்டுத் தளபாடங்கள், கருங்காலி அல்மாரி, தேக்கு அல்மாரி, Gas Oven, Show Case, தேக்கு சாப்பாட்டு மேசை, ஹோால் செற், Baby Cot மெத்தைகள், பற்றிசார்ஜர், சிங்கர்மெஷீன், RX 40 கசற் றேடியோ, கண்ணுடி மேசைகள், Office மேசை, Cutlery Set, எவர் சில்வர் Filter மற்றும் பல பொருள்கள் உடன் மலிவு விலையில். N. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சென்பற்றிக் சந்தியருகில்] [சி 0532]

## விற்பனை

புறெயிலர் கோழி, முட்டைகள், பிறிமா கோழித்தீன் வகைகள், கோழித்தண்ணீர் உபகரணங்கள், தீன உபகரணங்கள் நியாயமன விலையில் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரப்படி, கொக்குவில் கிளை: சற்குணராஜா பிரதர்ஸ், 660. K. K. S. ரோட், யாழ்ப்பாணம். சி-0575

நல்ல இன Hyline, Golden comet Hysex வெள்ளை, கறுப்பு, சிவப்பு பேட்டுக் குஞ்சுகளினதும் சேவல் குஞ்சுகளினதும் புறெயிலர் குஞ்சுகளினதும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. பேட்டுக்குஞ்சு, சேவல் குஞ்சு, புறெயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ், பிரப்படி, கொக்குவில். சி-0574

## தேவை

பாரிய வேலைக்கு சுண்ணும்பு தேவை உடன் தொடர்பு கொள்ளவும். முகவரி.- சமக்கோன் லிமிட்டெட், 165, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-0632]

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்களும், பொறுப்பான வேலைக்கு இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரும் தேவை. தொடர்பு: சீமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 0629)

யாழ் நகரிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு சமையல் ஆட்கள், Room boys/Waiters, பேக்கரி வேலை உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 2104, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 2104)

தொகையாக பனை ஓலைச் சார்வு தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி 2.05)

வெல்டிங் ஸரீல் கபினற் மற்றும் இரும்புத் தளபாடங்கள் செய்வதில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை. 1-9-87 முன் விண்ணப்பிக்கவும். UNIFO Industry, Vamban Road, Urumpirai. (சி- 0624]

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு எல்லாவித கமராக்களும் திருத்துவதில் நல்ல அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. சி-0567, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் சி-0576

## வாடகைக்கு

பிரதான வீதிக்கும் சின்னக்கடைக்கும் அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ச. உமாகாந்தன், இல 55, 4ம் குறுச்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி 0577)

## சேவை

உங்கள் உபயோகித்த வீட்டுத் தளபாடங்களை விற்பனை செய்யவோ அல்லது மாற்றுதல் செய்யவோ உடன் தொடர்பு கொள்க: எம். தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-0463

## வகுப்புக்கள்

26-08-87 ஆரம்பம். Spoken English with Grammar by S. B Iyar திங்கள் / புதன் / வெள்ளி நாட்களில் காலை 10—11 மணி, மாலை 3.30—4 30, இரவு 6 — 7 மணி 12, வைமன் வீதி, நல்லூர். [சி-0526]

1987ல் A/L பரீட்சை எடுக்காதவர்களுக்கான ஒரு வருட மீட்டல் வகுப்புக்களும் 1988ம் ஆண்டுக்கான ஒரு வருட விசேட மீட்டல் வகுப்புக்களும் ஆரம்பம்:- 1987-8-28 (வெள்ளி) மு. ப 7 மணி பௌதிகம் - வர்ணம் (மு. ப 7 - 8] ஏனையவை எமது ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படும். அத்துடன் ஆண்டு 10, 11, 12, 13 க்கான வகுப்புக்களும் ஆரம்பமாகும். Science Centre, Karaveddy. [சி 0513)

## மணப்பந்தல்

யாழ். இந்து குருகுல சவுதியில் பணிபுரியும் தற்சமயம் லீவில் நிற்கும் மணமகனுக்கு பெண் தேவை. வயது 30 தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 91/16 இந்து மகளிர் லேன், கந்தர்மடம். சி-0515

## FOR SALE

[a] Building sites adjoining Kandy Road at Kilinochchi, also Paddy Lands ¾ Acre & 2 Acres Plots under irrigation scheme.

[b] Coconut Land along Beach Road, Chavakachcheri suitable build houses, and Highland cultivation. Good water. Highest immediate offer accepted: Apply in writing Seen by appointment Advertiser, 50/1, Church Road, Chavakachcheri. (C 0631)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



க. வி. கதிரவேலு
(Chartered Accountant)
தோற்றம்: 08-12-1903
மறைவு: 28-07-1987

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணக்காளர் க. வி. கதிரவேலுவின் அந்தியேட்டிக் கிரியைகள் 27-08-87 வியாழக்கிழமைவல்வெட்டித்துறை ஊறணி மடத்தில் காலை 6 மணிக்கும், பின்பு வீட்டுச்சபிண்டீகரணக்கிரியைகள் காலை 11 மணிக்கு பத்தைமேனி, அச்சுவேலியில் நடைபெறும். இக்கிரியைகளில் உற்ரூர், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. ஞானசம்பந்தபிள்ளை,
பழைய டச் வீதி,
பத்தைமேனி,
அச்சுவேலி. (சி 0607)

## இளவாலை கல்வி வலயம்

[பண்டத்தரிப்பு]

இளவாலை கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளும் மூன்றும் தவணைக்க நாளை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும்இதே தினத்தில் ஆரம்பமாகுமென்று கல்லூரி அதிபர் அருட் திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார்.

CHINESE ABSORBENT GAUZE

| | | |
|---|---|---|
| 100 யார் | ரூ. | 620/- |

பருத்தி கம்பளி


| | | |
|---|---|---|
| 500 கிராம் | ரூ. | 68/- |
| 400 கிராம் | ரூ. | 55/- |

ADHESIVE PLASTERS

| | | |
|---|---|---|
| ½''x1மீ. | ரூ. | 3.50 |
| 1''x1மீ. | ரூ. | 5 50 |
| 2''x5மீ. | ரூ. | 26 00 |
| 3''x5மீ. | ரூ. | 37.50 |

BANDAGES

| | | |
|---|---|---|
| 1''x6யார் | ரூ. | 3.25 |
| 2''x6யார் | ரூ. | 5.50 |
| 3''x6யார் | ரூ. | 7.50 |



இரத்த அழுத்த மீற்றர்

| | | |
|---|---|---|
| மேர்கூரியல் | ரூ. | 550/- |
| அன்ரோய்ட் (Aneroid) | ரூ. | 400/- |

அழுத்த மீற்றருக்கான உதிரிப்பாகங்களும் உண்டு

| | | |
|---|---|---|
| இன்பிளேசன் பை | ரூ. | 120/- |
| பளுப்பும் வால்வும் | ரூ. | 150/- |
| பளுப்பு மட்டும் | ரூ. | 60/- |
| கண்ணுடிக்குழாய் | ரூ. | 65/- |
| Armband Comp | ரூ. | 240/- |




கையுறைகள்

பரிமாணங்கள்: 6, 6½, 7, 7½, 8
சோடி ரூ. 16.00

ஐஸ் பைகள்

| | | |
|---|---|---|
| ஓவல் வடிவம் | ரூ. | 90/- |
| வட்ட வடிவம் | ரூ. | 80/- |

HYPODERMIC NEEDLES

18 to 27 G ரூ. 14/-

DISPOSABLE SYRINGES (Japanese)

| | | |
|---|---|---|
| 1 cc | ரூ. | 5/- |
| 2·5 cc | ரூ. | 4/- |
| 5 cc | ரூ. | 4.75 |
| 20 cc | ரூ. | 7.50 |

பெறும் தொகைக்கேற்ப கழிவு வழங்கப்படும்

GEEKAY LIMITED
33, Bankshall Street,
Colombo - 11.
Phone: 540475, 22011
(A 2101)

## தகவல் தரவும்



அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியை சேர்ந்த க. வேலுப்பிள்ளை என்பவர் கடந்த 8-06-87-ல் பாதுகாப்பு கருதி தென்மராட்சி சென்றவர் இற்றைவரை வீடு திரும்பவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரிக்கு தகவல் தரவும். வே. மகேஸ்வரன், ஐவந்தலை, அல்வாய் தெற்கு, அல்வாய்

## மஹோற்சவம்

(மாவிட்டபுரம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையால் ஒத்திவைக்கப்பட்ட உற்சவத்தை தற்போது நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செப்டம்பர் 6ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

ஆலய தர்மகர்த்தாக்கள் சபை இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது

## நெளுக்குளம் பம்பைமடு மின்இணைப்புவேலை

(வவுனியா)

உலகவங்கியின் நிதிஉதவியுடன் 22 லட்சம் ரூபாய்செலவில் ஆரம்பிக்கப்பட்ட நெளுக்குளம் பம்பைமடு மின்இணைப்பு வேலை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும்வடபகுதியின்சூழ்நிலை காரணமாக இத்திட்டம் பின் போடப்பட்டது.

தற்போது நிலைமை சகஜத்திற்கு வந்ததையடுத்து திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புளியங்குளத்திற்கான மின்இணைப்பு வேலையும் நடைபெற்று வருகின்றது.

## பனை அபிவிருத்தி தொழில் கூடம்

(மண்டைதீவு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக் கொண்டான் தொழிற் பேட்டையில் பனை அபிவிருத்தி நடவடிக்கைகளுடனான தொழிற் கூடம் ஒன்றை அமைப்பதற்கு கட்டிடம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தில் பனை அபிவிருத்தியுடன் தொடர்பான உற்பத்திக் கூடம் ஒன்றை இயக்குவதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களில் ஒருவரான பூ. செல்லத்துரைசெய்து வருகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை என்ற இடத்தில் சுமார் நூறு ஏக்கர் நிலத்தில் பனம் தோப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஆலோசனையின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வளைகுடாவில் அமெரிக்க போர்க்கப்பல்—

# எச்சரிக்கையாக யந்திர துப்பாக்கி வேட்டுக்கள்

தெஹ்ரான், ஆக 25

**வளைகுடாவில் ஹோமோஸ் நீரிணைப் பகுதியில் அமெரிக்க போர்க் கப்பலான யு. எஸ். எஸ். கிட் கடும் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது நேற்று இடம்பெற்ற இத்துப்பாக்கிப் பிரயோகம் ஈரானிய அச்சுறுத்தல்களுக்கு எச்சரிகையாக விளங்கியது.**

நான்கு எண்ணெய்த்தாங்கிக் கப்பல்களுக்கு பாதுகாப்பளித்தபடி அமெரிக்க போர்க் கப்பலான யு. எஸ். எஸ் கிட் வளைகுடா வழியே வந்து கொண்டிருந்தது.

அச்சமயம் இரு ஈரானிய படகுகள் குறுக்கும் நெடுக்குமாக இந்த கப்பல் தொடர் அணியை குறுக்கீடு செய்தன. இதனையடுத்தே யு. எஸ் எஸ். கிட் அப்படகுகளை நோக்கி இயந்திரத் துப்பாக்கியால் எச்சரிக்கை வேட்டுக்களைத்தீர்த்தது.

வளைகுடாவில் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களுக்குக்குப் பாதுகாப்பளிப்பதை கடந்த மாதத்திலிருந்து அமெரிக்க கடற்படை ஆரம்பித்தது. தொடர்ந்து நேற்றைய தினமே ஓர் எச்சரிக்கை இராணுவ நடவடிக்கையாக இவ் வளைகுடாப் பகுதியில் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தை அமெரிக்கா முதல் தடவையாக மேற்கொண்டது.

இதற்கு முன்னர் ஓர் ஈரானிய கடற்படைக் கப்பல் அமெரிக்க பாதுகாப்புக் கப்பல்முன் எதிர்ப்படவே, அக் கப்பலை நோக்கி அமெரிக்க போர்க் கப்பல் ஒன்றிலிருந்து ஹெலிகப்டர்கள் பறந்து சென்று எச்சரிக்கை விடுத்தன.

உலகச் செய்திகள்

கே. ஜி. பிக்கு தகவல் வழங்கிய-----

## அமெரிக்க கடற்படை வீரருக்கு 30 வருட சிறை

வாஷிங்டன், ஆக. 25

சோவியத் யூனியனின் கே ஜி. பி. உளவு ஸ்தாபனத்துக்கு இரகசியத் தகவல்களை வழங்கினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அமெரிக்க கடற்படை வீரர் ஒருவருக்கு 30 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவ நீதிமன்றமொன்று இத்தண்டனையை நேற்று வழங்கியது.

கிளெய்ட்டன் லோன்பிரீ என்ற இந்த கடற்படை மாலுமி மாஸ்கோவிலும்,வியன்னாவிலுமுள்ள அமெரிக்க தூதரகங்களில் பணியாற்றிய போது, சோவியத் பெண் ஒருவருடன் தொடர்பு கொண்டு அமெரிக்க கடற்படையின் இரகசிய தகவல்களை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த கடற்படை வீரர்மீது 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இவர்மீதான 30 வருட சிறைத்தண்டனை போதுமானதல்ல என்றும் ஆயுட்காலத் தண்டனை விதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருந்தன

## கேரளாவில் கடல் கொந்தளிப்பு: 67 மீனவர் காப்பாற்றப்பட்டனர்

திருவனந்தபுரம், ஆக 25

கேரளாவைச் சேர்ந்த 67 க்கும் அதிகமான மீனவர்கள் பெரும் கடல் கொந்தளிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

இந்திய கடற்படை நேற்று கோரிக்கோட் கரையோர கடற்பகுதியில் இவர்களைக் காப்பாற்றியது.

இந்த மீனவர்களில் 7 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்போது சில மீனவர்களை இக்கடல் கொந்தளிப்பின் பின்னர் காணவில்லை எனவும் இவர்களைத்தேடும் பணியை இந்தியகடற்படை தீவிரமாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஹெஸ்ஸின் சடலம் இரகசிய நல்லடக்கம்!

பெர்லின், ஆக. 25

ஹிட்லரின் முன்னாள் சகாரூடோலப் ஹெஸ்ஸின் சடலம் இரகசியமான முறையில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த 17ந் திகதி மரணமான ஹெஸ் (93வயது) ஸின் சடலம் திட்டமிட்ட தினத்துக்கு இருதினங்கள் முன்பதாகவே வூண்ட்ஸிடேல் என்ற அவரது சொந்த இடத்தில் அடக்கஞ்செய்யப்பட்டது

நாஸி ஆதரவாளர்கள் இவரது மரணச் சடங்கில் பங்குபற்றுவார்கள் என்ற காரணத்தினாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஹெஸ்ஸின் மரணம் மீது சந்தேகம் கொண்ட அவரது உறவினர்கள் அவரது சடலத்தை இரண்டாவது தடவையாக பிரேத பரிசோதனை செய்தபோது ஹெஸ் தற்கொலை செய்து கொள்வதற்கு வேறு சிலர் அவருக்கு உதவினார்கள் என்பது தெளிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## ‘தென்னாசியநிலை விருத்தியடையும்’

(மாஸ்கோ)

“இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான சமாதான உடன்படிக்கையின் மூலம் தென்னாசிய பிராந்திய நிலைமை விருத்தியடைய அடிகோலப்பட்டுள்ளது’’ என்று சோவியத் யூனியன் நம்பிக்கை தெரிவித்துளளது.

‘‘அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த இருநாடுகள் தமது நீண்டகால தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதே இந்த உடன்படிக்கையாகும்’’ என்றும் சோவியத் தெரிவித்துள்ளது (ரா)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் விநாயக சதுர்த்தி உர்சவம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காலை முதல் மாலைவரை விசேட அபிஷேக ஆராதனைகளும், வழிபாட்டு நிகழ்ச்சிகளும்நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## 10 படையினர் தலைமறைவு

(உயிலங்குளம்)

மன்னார் தள்ளாடி ராணுவ முகாமிலிருந்து 10 ராணுவத்தினர் தமது ஆயுதங்களுடன் முகாமைவிட்டு தலைமறைவாகி விட்டதாகத் தெரியவருகின்றது.

## இந்திய உப ஜனாதிபதிக்கு எம்.ஜி ஆர். வாழ்த்துச் செய்தி

[சென்னை]

இந்தியக் குடியரசு துணைத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் சங்கர் தயாள்சர்மாவிற்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் நியூயோர்ச் மருத்துவ மனையில இருந்து வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

இதேவேளை தான் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருப்பதாக அங்கிருந்து தமிழக ஆளுநர் திரு. குரானாவிற்குத் தொலைபேசிமூலம் நேரடியாகத் திரு. எம். ஜி இராமச்சந்திரன் தனது உடல்நிலை குறித்து பேசியுள்ளார்

முதல்வரின் செயலாளர் திரு. பரமசிவமும், மாநிலத் தலைமைச் செயலாளருக்கு முதல்வர் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாகவும் உற்சாகமாகஇருப்பதாகவும் தொலைபேசியில் தெரிவித்துள்ளார். (வா)

பஞ்சாப்பில்—

## ஆறு பயங்கரவாதிகளால் ஒரு விவசாயி படுகொலை

புதுடில்லி, ஆக. 25

பஞ்சாப்பில் விவசாயி ஒருவர் ஆறுபயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்

பிரீட்டம்சிங் என்பவரே கொலையுண்டவிவசாயிஆவார் வீட்டில் இருந்தேபோதே இவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது அமிர்தஸரஸ் மாவட்டத்தில் உள்ள கஸெல் என்ற கிராமத்தில் இக்கொலைச்சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை பஞ்சாப்பில் ஐந்து முக்கிய பயங்கரவாதிகள் ஆயுதங்கள்சகிதம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். இவர்கள் பல கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## தூதுவர் டிக்ஸிற்றுக்கு 6 இந்திய கமாண்டோக்கள் பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு ஜே என் டிக்ஸிற்றின் மெய்ப்பாதுகாவலர்களாக ஆறு இந்திய கமாண்டோக்கள் யூலை மாதம் 29ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய-இலங்கை அரசுத் தலைவர்களுக்கிடையில் கடந்த 29ம் திகதி கைச்சாத்தான புதிய ஒப்பந்தத்தையடுத்தே இவ்வாறான பாதுகாப்பு பலப்படுத்தபபட்டதுடன், குண்டு துளைக்கமுடியாத காரொன்றும் திரு. டிக்ஸிற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகர் இல்லத்திற்கு இலங்கை விமானப்படையினருடன் மேலதிகமாக இந்திய எல்லைப்புற காவல் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (சி)

## “தமிழர்களின் உரிமைகளை ஐ. தே க. முன்னின்று பறித்தது’’

(மாவிட்டபுரம்)

‘‘ஸ்ரீலங்கா அரசின் இனவாத போக்கை எதிர்த்து சாத்வீக முறையிலும் ஆயுத முறையிலும் பாராடி இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார்கள். இனியும் நாம் ஏமாறாமல் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை பயன்படுத்தி எமதுஉரிமைகளை ஒன்றுபட்டுநின்று நிலைநிறுத்த வேண்டும்’’

இவ்வாறு இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் நடந்த அரசியல் கருத்தரங்கு ஒன்றில் கலந்துஉரையாற்றிய இணுவில் பிரஜைகள் குழுச் செயலாளர் தி. சி. சண்முகலிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

‘‘தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் ஐ. தே க. அரசு தான் முன்னின்று செயல்பட்டு வந்திருக்கிறது. 1947ம் ஆண்டு முதல் இக்கைங்கரியம் இடம்பெற்று வந்துள்ளதை வரலாறு காட்டுகிறது.

“ஐ தே க. அரசின் சுயரூபத்தை கண்டுபிடித்து அதற்கெதிராக போராடி ஓரளவு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ள தலைவர் பிரபாகரனுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் இன்றுள்ள நிலையில் நாம் மீண்டும் எமது உரிமைகளை வலியுறுத்தி தீர்க்கமான முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கவேண்டும். நாம் ஒன்றுபட்டு நின்று ஸ்ரீலங்கா அரசையும் இந்திய அரசையும் வலியுறுத்தவேண்டும்’’

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த மூர்த்தியும் உரையாற்றினர்.

## பனம் பொருள்: ஆராய்ச்சி நிலையம்

[யாழ்ப்பாணம்]

பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் கைதடி-கண்டிவீதியில் 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் திறந்துவைக்கப்படவுள்ளது. (ஓ)

இதோ எமது புதிய அறிமுகம்

தற்போது புதிதாக எம்மிடம் விற்பனைக்கு வந்துள்ளன.

‘செலப்புறோ’ (Celapro)

உருக்குத்தளபாடங்கள் (STEEL FURNITURES)

வீட்டுப்பாவனைக்குத் தேவையான சிறிய பெரிய அளவிலான

★ அலுமாரிகள் ★ மேசைகள்

அலுவலகங்களுக்குத் தேவையான

★ அலுவலக மேசைகள்
★ பைலிங் கபினேற்ஸ் (Filing Cabinets)
★ அலுமாரிகள்

என்பன விற்பனைக்குண்டு

நவீன முறையில் சிறந்த உருக்குத்தகட்டினாலான தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

முகமதலி அப்துலலி

5-7, பெரியகடை, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. 22515.

ஆடர்களுக்கு (Orders) நீங்கள் எம்முடன் கடிதமூலமாகவோ நேரிலோ தொடர்புகொள்ளலாம். [சி-0626]

**மணிவாக்கு**

அயலவரைப் பாதிக்காத வரைக்குந்தான் ஒருவன் சமாதானவாழ்வு வாழலாம்.

— டச் பழமொழி

## நமது நோக்கு

# முளையில் தெரிந்து கொள்வது விளையும் பயிருக்கு முக்கியம்

கடந்த பத்து வருடங்களாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி க. பொ. த. உயர்தர பரீட்சையில் முதலிடம் பெற்றுள்ளதாகச் செய்தி சொல்கிறது.

கடந்த நான்குவருடப் போரிலும், அண்மையில் வடமராட்சியில் நடைபெற்ற அட்டூழியத்திலும் கீர்த்திபெற்ற இக்கல்லூரி எங்கிருந்ததென்பதைப் பலர் அறியார்.

போர் ஒருபுறம்; மாணவர் இன்னொருபுறம். அடாது போர் உக்கிரமடைந்தாலும் விடாது படித்ததாலேயே பாரம்பரிய புகழை இன்றும் நிலைநாட்டியிருக்கிறது ஹாட்லி!

எமது விடயம் சிறிது வேறுபட்டது. ஹாட்லி போன்ற சில பாடசாலைகளின் சூழ்நிலையில் அதிவிவேகமாணவர் தோன்றுகின்றனர். பாடசாலைகளின் சிரேட்ட பகுதியில் சாதாரண, உயர்தர (O/L, A/L) வகுப்புகளில் அத்தகையமான வரின் கணித, விஞ்ஞான திறமை செவ்வனே கணிக்கப்படவேண்டும்

இளம் நிபுணர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் கற்பித்தல் அவர்களில் சிலர் கணித விஞ்ஞான மேதைகளாக உருவாகிறதற்கு உதவும்; எவ்வகையிலும் சமத்துவ சந்தர்ப்பம் என்ற கோட்பாட்டில் இத்தகைய திறமைசாலிகள் தேய்ந்துபோகாது பார்க்க வேண்டும்.

இந்தக்கருத்தை வழங்கியவர் இந்திய மத்திய ஆட்சியின் முன்னைநாள் அமைச்சர் சீ. சுப்பிரமணியம். அரசும் தனியார் நிறுவனங்களும் இத்தகைய நிபுணர்களை நாட்டின் மேன்மை பெற்ற விஞ்ஞானிகளாக்குவதில் தங்கள் நிதியில் ஒரு பகுதியை ஒதுக்குவது அவசியம் என்றும் அவர் கூறியது பொருத்தமாகும்.

எங்கள் நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் தோன்றிய கணிதமேதைகள்விஞ்ஞானிகள்-கணிதம், பௌதிகம் போன்றதுறைகளில்பெரியஉயர்ச்சி பெற்றவர்கள் ஆனால் சிவில்சேவிஸ் என்ற பசாசு அல்லது அரசின் நிர்ப்பந்தத்தால், பட்டத்துக்குப்பின் ஆராய்ச்சியென்ற வாய்ப்பின் இழப்புபோன்ற காரணங்களால் நோபல் பரிசுக்குத் தகைமையிருந்தும் இடையில் தறுக்கணித்து விட்டனர்.

கல்வியைப்பற்றிய இக்கருத்து சமத்துவ சந்தர்ப்பம் என்ற கோட்பாட்டின்விறுவிறுப்பில் கரைந்து போகலாம். ஆனால் விசேட திறமையைக்கண்டுபிடிக்க முடியுமானல் அதனல் நாட்டுக்கு உண்டாகும் நன்மை அளவிடமுடியாது எனவே கல்வியில் ஒருவிதமான பிரபுத்துவம் வேண்டத்தக்கது.

"கணிதத்தில் ஆர்வமில்லாதவர் இங்கு உள்ளிடப்படாது'' என்று கிரேக்க மேதை பிளேட்டோ அமைத்த அக்கடமியின் வாசலில் எழுதப்பட்டிருக்கிறது.

எம்மிற் பலர் கணிதத்தின் பெருமையறியாத நிலையில் இன்று கணக்காளர் என்ற பெரிய உத்தியோகத்துக்குரிய பாடமென்று தவருக எண்ணுகின்ரேம். கணிதத்தின் உயர்மட்ட அறிவுத்திறமை எதுவுமில்லாமல் கணக்காராகவரலாம். ஆனல் எவ்வித அறிவுக்கும்-நுண்ணிய அறிவிற்கும்கணிதத்திறமை அடிப்படையாகிறது.

இதனல்தான்எந்தபொது விவேகபரீட்சையிலும் கணிதம் ஒரு சட்டாய பாடமாகிறது

இதுகாறும் நாம் கூறியதற்குப் பின்னணி என்னவென்பதை விளக்கவேண்டும் உலகத்திலேயே கணித ஆராய்ச்சி மேதையென்று கணிக்கப்படும் தமிழ்நாட்டின் தவப்புதல்வன் ராமானுஜனை பலர் கேள்விப்படாதிருக்கலாம்.

மேற்படிப்புக்கு வசதியில்லாத இந்தப் பிராமணச் சிறுவன் அரச உத்தியோகம் பார்த்தான் அவருடைய வெள்ளைக்கார அதிகாரி அவரின் அற்புத திறமையைக் கண்டு, கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகம் அனுப்பி வைத்தார். அங்கு அக்காலத்தில் இருந்த இந்த நூற்ருண்டு கண்ட பெரும் கணித நிபுணர் பேராசிரியர் ஹாடியின் மதிப்புப் பெற்றுர் ராமானுஜன்.

மூன்றுவருட கேம்பிரிட்ஜ் வாழ்க்கையில் அந்த நாட்டின் குளிர் சுவாத்தியத்தை தாங்கமுடியாத ராமானுஜனுக்கு கயரோகம் பிடித்தது.

நாடு திரும்பி தமது ஆராய்ச்சிகளில் தொடர்ந்த போதும் சில மாதங்களில் அவர் காலமானுர். அவருடைய ஈமக்கிரியைகளுக்கு கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழக சகாக்கள் இந்தியா வந்தனரென்ருல் அவருடைய புகழ் என்னே?

முப்பத்திரண்டு வயதில் மறைந்த ராமானுஜன் முழுவாழ்வு வாழ்ந்திருந்தால் அறிவியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பார்.

இந்த வருடம் அவருடைய நூற்ருண்டு நிறைவு வைபவம் எண்பது வயதுக்கு மேற்பட்ட அவருடைய மனைவி ஜானகி அம்மாளுக்கு 20,000 ரூபா பொற்கிழியும், மாதம் 1000 ரூபா பென்ஷனும் வழங்கப்படுகிறது.

உலகப் புகழை இந்தியாவுக்குத் தேடித்தந்த ராமானுஜனுக்கு இந்த நூற்ருண்டு விழாவையொட்டி தேகாந்தநிலையில் நோபல்பரிசு வழங்கவேண்டுமென்று முன்னைநாள் அமைச்சர் ஆலோசனை வழங்கியிருக்கிறுர்.

மூர்த்திசிறிதானலும் இலங்கையின் கீர்த்தி பெரிது. எங்கள் சுந்தரலிங்கங்கள், மயில்வாகனங்கள், எல்லியேசர்கள் போன்ற கணித விஞ்ஞான மேதைகள், விதை, முளை, மரம் என்ற பருவங்களில் வளர்க்கப்பட்டு, மலர்ந்து. காய்த்து கனிதரும் வகையில் விருத்தியடைய வழிகாண வேண்டும்.

# கொக்கிளாய்பகுதியில் தமிழர் குடியேற அரச படை தடை

(கே. கேசவநம்பி)

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருவாட்டுக்கேணி, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு, பெரியகுளம் ஆகிய பகுதிகளிலிருந்து கடந்த கால ராணுவ நடவடிக்கைகளால் வெளியேறி வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ள பூர்வீகக் குடிகளான தமிழ்மக்கள் அங்கு மீண்டும் குடியேற விரும்பி அங்கு சென்றபோதும் அவர்களை அங்கு செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்துவருவதாக அப்பகுதிகளைச் சேர்ந்த பிரஜைகள் குழுத்தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இப்பகுதிகளில் பூர்வீகக்குடிகளல்லாமல், மீன்பிடிப்பதற்காக வந்து குடியேறிய வெளிமாவட்ட மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு மீண்டும் குடிஅமர்த்தப்பட்டுள்ளனரென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று செம்மலையிலும் வெளிமாவட்ட மக்கள் ஆயுத பாணிகளாக்கப்பட்டு மீன்பிடிப்பதற்காகக் குடியேற்றப்பட்டுள்ளனரெனவும் அவர்கள் கூறினர்.

ஆனல் இப்பிரதேசங்களில் மீண்டும் தமிழ்மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான வசதிகள் இதுவரை செய்யப்படவில்லையென முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது--

"தமிழ்க்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவதற்கு அவர்களுக்கு வேண்டிய ஆதார சேவைகள். வைத்திய சாலைகள், பாடசாலைகள், பண்டகசாலைகள் யாவும் இவங்கை வேண்டும் இவைகள் எவையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. தமது உத்தியோகத்தர்கள் மூலம் இவைகள் சரியாகச் செய்து முடிக்கப்பட்ட பின்பே மீண்டும் அங்கு தமிழ் மக்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்''

முல்லைத்தீவுப் பிரதேசத்தில்

# விதைநெல், உரம், களைநாசினி அவசரமாகத் தேவை

வடமாகாணத்தியே முல்லைதீவு மாவட்டம்விவசாயத்திலும், மீன்பிடித்தொழிலும் அதிக இலாப மீட்டும் பிரதேசமாக அமைந்துள்ளது. முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பெரும்பாலான கிராம மக்கள் 1984ம் ஆண்டில் சொந்த இருப்பிடங்களை விட்டு இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இதில் செம்மலை, அளம்பில், குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம், தண்ணிமுறிப்பு ஆகிய கிராமக்கள் 1985 வைகாசி மாதத்திலிருந்துபடிப்படியாக தமது இருப்பிடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும் பெரும்பகுதி விவசாய நிலம் தடைசெய்யப்பட்ட பிரதே

**சி.அம்பிகைபாகன்**

சத்திலேயே இருந்ததினுலும் இராணுவக் கெடுபிடிகளினுலும், விவசாயமுயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

அகதிகளாக்கப்பட்டு மீண்டும் வீடுகளுக்கு வந்த மக்கள் வெறுமையாக விடப்பட்ட வீடுகளையே காணவேண்டியிருந்தது. இதனல் இவர்கள் தமது உணவுக்கே திண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அரசினரால் ஆறு மாதங்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட அரைகுறை நிவாரணத்தைக் கொண்டு தம்முடைய உயிர்களை மட்டுமே காப்பாற்ற முடிந்தது சொல்லொணு வறுமையும் அவர்கள் விவசாய முயற்சிகளுக்கு பெரும் இடையூருக இருந்தது 1986ல் மக்கள் கடன்பட்டு ஒரு பகுதி நிலத்தில் விவசாயத்தை மேற்கொண்டனர். ஆனல் இயற்கையின் கோரத்தாண்டவத்தால் இட்ட முதலையும் இழந்து வயிற்றுக்கு உணவுமின்றி. கடனைக்கொடுக்க வழியுமின்றி தவிக்கின்றனர்.

### விதை நெல்

தற்போது வறட்சி நிவாரணம் வழங்கப்படுவது ஓரளவுக்கு ஆறுதலளிக்கின்றது

இவ்வருடம் கடன் பட்டாவது விவசாயம் செய்யத் துணிந்து விட்ட மக்கள்விதை நெல் முதலான பொருட்கள் கிடைக்காமல் பெரிதும் துடிதுடிதுடித்துக் கொண்டிருக்கின்றனர். காசைத்தான்கடன் பட்டாலும் விதைநெல் எங்குமே வாங்க முடியாதுள்ளது. இருக்கும் சொற்ப நெல்லும் புசல்150 ஆகவோ அதனிலும் கூடுதலாகவோ தான் வாங்க வேண்டிய நிலை உள்ளது.

### உரமும் களைநாசினியும்

எனவே இப்பிரதேசமக்களுக்கு விதைநெல், சிறு தானிய விதைகள் உரம், களைநாசினி, கிருமிநாசினி முதலிய விவசாயப் பொருள்கள் தட்டுப்பாடின்றியும் நியாயமான விலைக்கும் கிடைப்பதற்கு அதிகாரிகள் ஆவன செய்து தரவேண்டும். தவறின் இம்மக்கள் இந்த வருடமும் விவசாய முயற்சிகளில் சோடைபோக நேரிடும்.

மீன்பிடித்தொழில் செய்வோர் தமது மீன்பிடிஉபகரணங்களை வாங்குவதற்கு அவர்களுக்கு உதவவேண்டும் மீன்பிடித் தொழிலாளர்கள் கடந்த நானகு ஆண்டுகளாகவே தமது தொழிலைசெய்வது தடைசெய்யப்பட்டும் மட்டுப்படுத்தப்பட்டும் வந்தது நாடறிந்தது இவர்கள்படும்கஷ்டம் அனுபவிக்கும் வறுமை சொல்லில் அடங்காது. மீன்பிடித் தொழிலாளர்களுக்கும்,ஏனைய விவசாயிகளுக்கும் அவர்கள் தம்தொழிலை மேற்கொள்ள அதிகாரிகள் உடனடி நடவடிக்கையை எடுக்கத்தவறின் சமாதான ஒப்பந்தத்தின் நன்மைகளை முல்லைமாவட்ட மக்கள் பெறத்தவறி விடுவர் என்பது திண்ணம்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகள் இதுவிடயத்தில் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கிறேம்.

# நம்பிக்கைக்குப்பாத்திரமான ஒரு நண்பன்

அமரர். தங்கராஜாவின் மறைவு கேட்டு யாழ்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர் வழங்கிய இரங்கல் உரை:

நான் வெளியே போயிருந்தபடியால் திரு. தங்கராஜாவின் மறைவு பற்றி அறிய முடியாமல் போய் விட்டது

ஒரே ஒரு முறை நானும் எங்கள் கல்லூரியின் சிரேட்ட அங்கத்தவரும் அவரை சந்தித்த நினைவு வருகின்றது'

யாழ்ப்பாணக் கல்லூரியை, யாழ்ப்பாண வளாகத்தின் ஒரு பகுதியாக சுவீகரிக்க அரசு திட்டமிட்டது என்று அறிந்தவுடன் நாட்டில் இருபது பிரபல அறிஞர்களை சந்தித்து ஆலோசனை கேட்க முயன்ரேம் அதில் முதலிடம் பெற்றவர் அமரர் கே. சி. தங்கராஜா. அவருடைய கொழும்பிலுள்ள கடதாசிக் கூட்டுத்தாபன பணிமனையில் நாம் அவரை சந்தித்தோம். சந்தித்தபோது ஆட்சித் திறமைக்கு முன் மாதிரியான ஒருவர் எங்கள் கண்முன் தோன்றினுர். கம்பீரமான நடையும், பேச்சும் முகச் சுபாவமும் அவருடைய பண்பையும், பெருந் தன்மையையும் வெளிப்படுத்தின. எங்களை உள்ளக் கனிவோடு வரவேற்ற அவர், எங்களை வருத்திக் கொண்டிருக்கும் பிரச்னையை ஆழமாக விசாரித்து அதில் தன் சிந்தனையை முற்ருகப் பதித்திட்டார். அப்பொழுதே அவரது நேர்மையும் நிதானமும் பளிச்சென்று வெளித்தன.

கல்வியில் தனியார் ஸ்தாபனங்களுக்கு உரிய இடம் உண்டென்பதையும் மதஞ்சார்ந்த மக்கள் சமுதாயம் அத்தகைய நிறுவனங்களை நிர்வகிக்க உரிமையுண்டென்பதையும் தெளிவாக விளக்கினுர்.

எங்கள் நம்பிக்கைக்குப்பாத்திரமான நண்பன் இவரென்று நாம் திருப்தி அடைந்ததோடு அதற்கு உரித்தான கௌரவம் ஒன்றையும் வழங்கினேம். யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்ப விவசாய உயர் நிறுவனத்தின் முதலாவது முகாமையாளர் சபையின் ஸ்தாபக அங்கத்தவராக அவரை நியமித்தோம். இவை அனைத்தும் அவரில் உண்டான ஒரே ஒரு சந்திப்பின் பலனுகும்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நாம் அமரர் தங்கராஜாவில் எத்துணை மதிப்பு வைத்திருந்தோம் என்பதற்கு இச் சம்பவம் சான்றுபகர்கின்றது இன்று யாழ்ப்பாணம் ஒரு புதிய ஒளியை நாடி நிற்கும் விடிவு காலத்தில் அடியெடுத்து வைக்கின்றது. இவ்வேளையில் அமர் தங்கராஜா போன்ற தனித்துவ ஆளுமை படைத்தோர் இல்லாமற் போவது வேதனைக்குரியது.

அப் பெரியாரின் சிறந்த வாழ்வும் சேவையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்து அவரது ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

## கல்முனை மத்திய கொத்தணிப் பாடசாலைகள்

(கல்முனை)

கல்முனை மத்தியகொத்தணியாக பத்து பாடசாலைகள் கள் தெரிவு செய் யப்பட்டு, அதற்கு முதன்மைப்பாடசாலையாக கார்மேல் பாத்திமாக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கார்மேல் பாத்திமாக்கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் எஸ். ஏ. ஐ. மத்தியூ கொத்தணி பாடசாலைகளின் அதிபராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இக்கொத்தணிக்குள் அடங்கும் பாடசாலைகள் வருமாறு;

கார்மேல் பாத்திமாக் கல்லூரி (முதன்மைப் பாடசாலை) வெஸ்லி உயர்தர பாடசாலை, அல் அக்ஷா மகாவித்தியாலயம், இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், சிங்கள மத்திய மகாவித்தியாலயம், விவேகானந்தா வித்தியாலயம், சிறிமாமாங்கம் வித்தியாலயம், சிவசக்தி வித்தியாலயம், கணேச வித்தியாலயம், ராணமடு வித்தியாலயம்

இப்பாடசாலைகளில் சுமார் எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும், முந்நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் இந்தியப் படை அதிகரிப்பு

[திருகோணமலை நிருபர்]

இந்திய அமைதி காக்கும் படைப்பிரிவினர் மேலும் ஐநூறு பேர் கடந்த 22ந் திகதி கப்பலில் திருகோணமலை வந்து சேர்ந்துள்ளனர். சீனக்குடா 'பிறிமா' இறங்கு துறையில் வந்திறங்கியவர்கள் சகல முகாம்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஏற்கனவே இங்கு 1500 பேர் தங்கியிருக்கின்றனர். இதேவேளை நகரிலும், கிராமப்புறங்களிலும் இந்திய அமைதிகாக்கும் பிரிவினரின் ரோந்து நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 6ம் திகதி நகரில் 10ம் குறிச்சியில்வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்ட ரி. ஆறுமுகநாதன் என்பவரின் கொலை தொடர்பாகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மலையகத்தில் சிங்கள இளைஞர்களுக்கு சோதனைமேல் சோதனை

[நுவரெலியா நிருபர்]

மலையகத்தில் முக்கிய வீதிகளின் சந்தியில் ஆயுதந் தாங்கிய பொலிசார் வாகனங்களையும், பிரயாணிகளையும் பலத்த சோதனைசெய்து வருகிறார்கள்.

சோதனைகள் தற்போதுமிகக் கடுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இவற்றில் ஒரு பெரும் மாற்றத்தைக் காணமுடிகின்றது

தமிழ் இளைஞர்கள் முன்னர் எவ்வளவு அச்சப்பட்டார்களோ அதைவிடப் பன்மடங்கு அச்சத்துடன் சிங்கள இளைஞர்கள் காணப்படுகின்றனர். சிங்கள இளைஞரின் அடையாள அட்டையைப் பரிசோதித்துத் துருவித் துருவிச் சோதனைசெய்கின்றார்கள். முன்பு தமிழ் இளைஞர்கள் அடையாள அட்டை இல்லாமல் தாக்கப்பட்டும், கைதுசெய்யப்பட்டும் வந்தது போல இப்போது சிங்கள இளைஞர்கள் தாக்கப்பட்டும் கைதுசெய்யப்பட்டும் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்.

அண்மையில் கொழும்பில் இருந்துவந்த இ.போ.ச. பஸ் ஒன்றை அட்டனில் சோதனை செய்த பொலிசார் சிங்கள மக்கள் எல்லோரும் இறங்குங்கள் எனக் கூறி சிங்கள மக்களின் அடையாள அட்டைகளையும், அவர்களது உடைமைகளையும் பரிசோதித்தனர். தமிழர்களும், முஸ்லிம்களும் பஸ்ஸை விட்டுஇறங்காது பஸ்ஸிலேயே இருந்தனர்.

## ஓய்வுபெற்றார்

[பண்டத்தரிப்பு]

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் என். அரிச்சந்திரா தமது 35 வருட அரச சேவையிலிருந்து கடந்தமாதம் தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.

## இந்திய இராணுவ காரியாலயம்

[வவனியா]

வவனியா கச்சேரி கட்டிடம் ஒன்றில் இந்திய இராணுவத்தினரின் காரியாலயம் ஒன்று இயங்குகின்றது.

பொதுமக்கள் தொடர்பு காரியாலயமாகவே இது இயங்குகின்றது.

இந்தய இராணுவத்தினரின் பிரதானஅலுவலகம் யாழ்வீதி விவசாயப்பண்ணையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அட்டன் விகாரை பிரதம பிக்கு ஆஸ்பத்திரியில்

[நுவரெலியா]

அட்டன் பௌத்த விகாரையின் அதிபதியும் மத்திய மலைப் பிரதேச பிரதான பௌத்த குருவுமாகிய 'மீகஹாதென்னே ஸ்ரீசுமண நாயக்க தேரோ' டிக்கோயா அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் சமாதான உடன்படிக்கையை எதிர்த்து பௌத்த பிக்குகள் நடாத்திய எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்ட இவர் ஊர்வலத்தின் முன் சென்ற போது கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பலத்த காயத்துக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# "டிஸ்பிரின் என் நம்பிக்கைத் துணை நடுக் கடலிலும்"



"திரை கடலோடும் என் சிரமமான தொழிலில் காய்ச்சல், தலைவலி, தடிமல், வலிகள், நோவுகள் வந்து விட்டால், சுலபமான, துரிதமான நிவாரணம் கட்டாயம் தேவை.

"நான் அறிந்த காலத்திலிருந்து என் நம்பிக்கைத் துணையாக இருப்பது டிஸ்பிரின். ஏனெனில் அது எப்போதும் சிறப்பான நிவாரணம் தரும். . அதுவும் சீக்கிரமாக! அலைகளை அடக்கி உழைக்கும் நானும் வலிகளிலிருந்து நிவாரணம் தரும் டிஸ்பிரினும் இணைபிரியாத தோழர்கள்- எப்போதும். உலகின் எப் பாகத்திலும்"

திரு. பிரியதர்ஷன் கனகசபை
வாத்தகக் கப்பல் காப்டன்

உலகெங்கும் இலட்சக்கணக்கான மக்கள், வலிகள் காய்ச்சலிலிருந்து துரித நிவாரணம் பெற, நாற்பது வருடங்களுக்கும் மேலாக, டிஸ்பிரினை நம்பி வந்திருக்கிறார்கள். துரிதமான, நிச்சயமான நிவாரணத்துக்கு டாக்டர்கள் அதனைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் கரையக்கூடியது.

நம்பிக்கையுடன் பாவியுங்கள் டிஸ்பிரின்.

## டிஸ்பிரின்

துரித நிவாரணத்துக்கு
உலகெங்கும் நம்பப்படுவது




QUEST 1211,

ஒரு றெக்கிட் அன் கோல்மன் தயாரிப்பு

விலை: ஒரு மாத்திரை 50 சதம் வளர்ந்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.



பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ.யின் சுமார் மூன்று லட்ச ரூபா செலவில் நிறுவப்பட்ட மாடிக் கட்டிட திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீன முதல்வர் அதி வண. டி. ஜே. அம்பலவாணர் திரைநீக்கம் செய்து திறந்துவைப்பதை படத்தில் காணலாம். பண்டத்தரிப்பு வை. எம் சி. ஏ. தலைவர் ஆசிரியர் திரு எஸ். இரத்தினவேலும் படத்தில் காணப்படுகின்றார்.

[படம்: பண்டத்தரிப்பு நிருபர்]

# "வடபகுதி அனர்த்தங்கள் தென்பகுதி மக்களுக்குத் தெரியாது"

## —பிக்கு கூறுகிறார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை பிரதமகுரு இங்கு விஜயம் செய்து இவ்விகாரையை மீண்டும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டுளளார்.

காங்கேசன்துறை பழைய ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் இயங்கிவந்த மேற்படிவிகாரை வன்செயல்களையடுத்து மூடப்பட்டு அங்கு ராணுவம் முகாமிட்டு இருந்தது தெரிந்ததே.

விகாரை மூடப்பட்டதையடுத்து தென்பகுதிக்குத்திரும்பிய விகாரையின் பிரதமகுரு வண. நெல்கல்லே பதுமஸ்ரீ தேரோ தற்போது இங்கு மீண்டும் வந்துள்ளார்.

விகாரையையும், சுற்றுடலையும் புனரமைப்புச்செய்து உடனடியாக மீண்டும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் ராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இடங்களையும் அவர் சென்று பார்வையிட்டார்.

இவ்வாறான அனர்த்தங்கள் நிகழ்ந்ததுபற்றி தென்பகுதி மக்களுக்கு தெரியாது என்றும் அவற்றைப் புனரமைக்க தாமும் முடிந்த அளவில் உதவுவதாகவும் தேரோ பிரஜைகள்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபோது குறிப்பிட்டார்.

மாவிட்டபுரத்தில் பெண்மணி ஒருவர் கதறி அழுது இராணுவ அட்டூழியம் பற்றி பிரஸ்தாபித்தபோது தேரோ அதனை அவதானத்துடன்கேட்டறிந்தார்.

வலிவடக்கில்—

# வீடுகளை முற்றாக இழந்தோருக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் உதவும்

(மாவிட்டபுரம்)

வலி.வடக்கில் வீடுகளை முற்றாக இழந்து குடியிருக்க முடியாத நிலையில் உள்ள ஏழைமக்களுக்கு வீடு அமைக்க 3000 ரூபாவும், வீட்டு மற்றும் சமையல் உபகரணங்களை வாங்க 3000 ரூபாவும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்படவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி வலி வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றிய கூட்டத்தில் கலந்து பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அரசுசார்பற்ற நிறுவனமாகும். அரச நிறுவனங்கள் போன்று வசதிகள் இல்லாதிருந்தாலும் குடியிருக்க வழியில்லாத நிலையில உள்ள மக்களுக்கு உடனடியாக உதவ முன்வந்துள்ளது. அரசாங்க உதவிகளை திட்டமிட்டு செயற்படுத்த காலதாமதப் ஆகலாம் ஆகவேதான் உடனடி நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

"நியாயபூர்வமாகவும், ஆதாரபூர்வமாகவும் இழப்புகள், சேதங்களை மதிப்பிட்டு புனர்வாழ்வுப் பிரச்னை எவ்வளவு பாரதூரமாக உள்ளது என்பதை உலக நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டவேண்டும.

"அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் செய்யும்உதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் வீடு கட்டவும், உபகரணங்கள் வாங்கவும் வழங்கப்படவுள்ள 6000 ரூபாவை சரியான முறையில் பயன்படுத்துவது அவசியம். அதனைப் பிரஜைகள் குழுவினரும், கிராமரீதியில் செயற்படும் பொதுநல நிறுவனங்களும் அடங்கிய குழு கண்காணிக்கவேண்டும்."

இராணுவ நடவடிக்கையால்—

# பல்தொழில் தொகுப்பு நிலையம் பலத்த சேதம்!

(மண்டைதீவு)

வடபகுதியில் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பாரிய கட்டிடங்களை கொண்ட திக்கம் பல் தொழில் தொகுப்பு நிலையம் அண்மையில் வடமராட்சியில நடந்த தாக்குதல்களினால் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இச்சேதங்களினால் பனை அபிவிருத்திச் சபைக்கும் பல லட்சம்ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

இச்சேதத்தையடுத்து பனை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான பல பொருள்கள் இத்தொகுப்பிலிருந்து காணாமல் போய்விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை பங்குத்தந்தை அருட் திரு ப. இருதயதாஸ் அடிகளார் அடுத்தமாதம் 1-ம் திகதி தொடக்கம் கிளிநொச்சி பங்குத் தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் சிறந்த பொதுநல சேவைகளையும், இறைபணிகளையும் பாராட்டு முகமாக சேவை நலம் பாராட்டு வைபவம் ஒன்று சில்லாலை பங்கு மக்கள் சார்பில் இம் மாதம் 30-ம் திகதியன்று சில்லாலை புனித கதிரைமாதா ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது,

## யாருடையது?

திரு கதிரவேலு துரைராசா என்பவர் ஐந்து திறப்புக்கள் கொண்ட ஒரு கோர்வையைக் கண்டு எடுகது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## ஆங்கில தகுதிகாண் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் தேர்வு அடுத்தமாதம் 14-ம் திகதி நடைபெறவுள்ளது.

## ரூ. 49 கோடி நஷ்டம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரைகாலம் ஏற்பட்ட ராணுவ நடவடிக்கைகள் காரணமாக 49 கோடிரூபா நஷ்டம் ஏற்பட்டதாக கணக்கறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இக்கணக்குவிபரம் தனிப்பட்ட, பொதுசொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் என மதிப்பீடு செய்யப்பட்டதுடன் விவசாய, கால்நடை, வாகனஅழிப்புகளும் இதில் அடங்குமென கூறப்பட்டுள்ளது.

## உதவிக்கரம் நீட்டும் உலக தரிசன இயக்கம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சென், ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்தகோரிக்கையை அடுத்து கீரிமலை, வலித்தூண்டல் ஆகிய பகுதிகளில் ராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உலக தரிசன இயக்கம் முன்வந்துள்ளது.

மேற்படி சங்கப் பிரதிநிதிகள் சகிதம் உலக தரிசன இயக்க திட்ட முகாமையாளர் பி. குணரத்தினம் அண்மையில் கீரிமலை வலித்தூண்டல் ஆகிய பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து அங்கு ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார்.

தங்கள் வீடுகளை இழந்த அகதிகள் குடும்பங்களை அழைத்து மேர்படி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி. பங்கிராஸ் தலைமையில் ஆலோசனைக்கூட்டமொன்றையும் உலக தரிசன இயக்க திட்ட முகாமையாளர் குணரத்தினம் நடாத்தினர்.

## வரப்பெற்றோம்

நூல்: கந்தரனுபூதி (எளிய நடையிலான உரையுடன் கூடியது)

உரையும் வெளியீடும்: மெய்கண்டான் அதிபர் நா. இரத்தினசபாபதி அவர்களால் தொகுக்கப்பெற்று மெய்கண்டான் அன்பளிப்பாக வெளியிடப்பட்டது.

பாடல், சந்தி பிரித்த பாடல், கொண்டுகூட்டு பொழிப்புரை எனும் அப்சங்களுடன் அழகான அச்சில் அமைந்துள்ளது இந்நூல் 1975 ஆண்டு மேற்படி அதிபரால் தொகுக்கப்பட்டுப் பலருக்கும் பயன்பட்டுவரும் உரை இம்முறை நல்லைக் கந்தன் திருவிழாவில் அன்பர்களுக்குக் கிடைத்துள்ளது. சிரமப்படாமல் படிக்கக்கூடிய உரை அமைப்பும் சுலபமாகப் பாராயணம்செய்ய த்தக்க நூலமைப்பும் பாராட்டத்தக்கன. இருபத்தைந்தாவது வருடமாக முருகன் புகழ்பாடும் பிரபந்தங்களை அன்பர்க்கு அன்பளிப்புச்செய்யும் மெய்கண்டான் நிறுவனம்இம்முறை அழகிய மூவர்ண அட்டைப் படத்தில் நல்லூர்க் கோவிலையும் தேர்த்திரு விழாவை அமைத்திருப்பது நூலை வெகு கவர்ச்சியாக்கியுள்ளது.

'உனது பாதமலரில் மந்திரப் பாமாலை ஒன்று சாத்த அருள் புரியவேண்டும்' என்று அருணகிரிநாதர் முருகனை வேண்டி அருள்பெற்ற பெருமைஉடைய கந்தரனுபூதி முருகன் திருவிழாக் காலத்திலும் தினமும் முருகனடியார்களால் பாராணம் செய்யத்தக்கது திருமுருகாற்றுப் படைபோல் சித்திகள் அருளவல்லது இதனைப் பெற்றுப் பாராயணம் செய்யும் அடியார் இந்நிறுவனத்தை வாழ்த்தும் கடமையுடையர் எனலாம்.

தி. பொன்னம்பலவாணர்

## தீவுப்பகுதி பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவை மீண்டும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இ. பி. போ. சபை ஆரம்பிக்கவுள்ளதாக சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(வா)

## நோயாளர் பெரும் அவதி

[பலாலி]

காங்கேசன்துறை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் தண்ணீரின்மையாலும், அடிக்கடி ஏற்படும் மின்தடையினாலும் நோயாளர் பெரும் அவதிப்படுகின்றனர்.

இவ்வைத்தியசாலையில் 1932ம் ஆண்டு தண்ணீர்த் தாங்கி கட்டப்பட்டு குழாய்கள் பொருத்தப்பட்டன. அதன் பின்னர் இதுவரை இக்குழாய்களின் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத்தெரியவருகிறது.

## பாடசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

[பலாலி]

ராணுவத் தாக்குதலால் முற்றாக அழிந்துள்ள உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையை மீண்டும் இயக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## வர்த்தகர்கள் கவலை

(ஒட்டுசுட்டான்)

பரந்தன்நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுள் முகாமிட்டிருக்கும் இலங்கை ராணுவத்தினர் வெளியேறுதமையினால் அப்பகுதியில் வியாபாரம் செய்துவந்த நூற்றுக்குமேற்பட்ட வர்த்தகர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

## பாதிப்புபற்றி படிவங்கள் அனுப்ப வேண்டும்

[யாழ்ப்பாணம]

தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள்பற்றி அரசாங்க அதிபருக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் சத்தியக்கடுதாசி அனுப்பிவைத்தவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான படிவங்களையும் திருப்பி கொடுக்க வேண்டும்.

ஏற்கனவே சத்தியக்கடுதாசி அனுப்பியவர்கள் இப்படிவங்களை அனுப்பாவிருந்தால் உடனடியாக அனுப்புமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## யாழ் ஆஸ்பத்திரி கட்டிட வேலைகள்

(அலுவலக நிருபர்)

யாழ் புதிய போதனா வைத்தியசாலையின் அடித்தளகட்டிட வேலை டிசம்பர் மாதத்துக்கு முன்னர் முடிவுறும் தறுவாயில் இருக்கிறது.

புதிய போதனா வைத்தியசாலைக்கு 5 மாடிகள் கட்டப்படவுள்ளது தெரிந்ததே.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பிரச்னைகளாலும் சிமெந்து தட்டுப்பாடு காரணமாகவும் கட்டிட வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

நிலமை சீரானதைத் தொடர்ந்து மீண்டும் வேலைகள் துரிதவேகத்தில் நடைபெறுகின்றன. டிசம்பருக்கு முன்னர் அடித்தளக்கட்டிடம் பணிப்பாளரிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

மானிப்பாய் கொக்குவில்
சாவகச்சேரியில்
குறுகிய காலத்தில் சலுகைக் கட்டணத்தில்
## கம்பியூட்டர் கல்வி



COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக்காலம் 2 மாதம் கட்டணம் 750/- மட்டுமே
சேரும்பொழுது செலுத்தவேண்டியது 350/- மட்டும்.

ஆரம்பம்:
சனி, ஞாயிறு வகுப்புக்கள்: 30-08-87
திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்: 31-08-87

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
சான்றிதழ் (Diploma) வழங்கப்படும்

**UNIKCO** Computer Centre

(அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

யாழ். ரோட் (சுதுமலைச் சந்தி) மானிப்பாய்
கே. கே. எஸ். ரோட். (3ம் கட்டை) கொக்குவில்.
சுஷாந்தி கல்வி நிலையம், 23, டச்ரோட், சாவகச்சேரி.
(சி-0601)


## பாடசாலை 31-ல் ஆரம்பம்

[வல்வெட்டித்துறை]

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் 3-ம் தவணைக்காக இம்மாதம் 31ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்ரனிபுரத்தில்
## புதிய இந்திய ராணுவ முகாம்

[பலாலி]

இந்திய அமைதிகாக்கும் படையினர் பலாலியிலுள்ள அன்ரனிபுரம் என்ற இடத்தில் புதிய முகாமமைத்துள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்ட படையினரைக்கொண்ட இம்முகாம் கூடாரச் சீலைகளைக்கொண்டே அமைந்துள்ளது. இரவு நேரத் அரிக்கன் லாம்பின் உதவியுடன் கடமையில் ஈடுபடுகின்றனர்

சுகாதாரப் பகுதி
## உத்தியோகத்தர் பற்றுக்குறை

[யாழ்ப்பாணம்]

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் வைத்திய ஆய்வுகூட பரிசோதனையாளர், மருந்தாளர்கள் உட்படப் பல சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் பற்றுக்குறையாக இருப்பதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்குறித்த பதவியாளர்களுக்கான பயிற்சிகளின் போது தமிழர்கள் தெரிவுசெய்யப்படாமையே இந்தப் பற்றுக்குறைக்கான காரணமென்று தெரியவருகிறது. [ஓ]


## WANTED

Wanted from 1-st September, 1987, for St. John's College, Jaffna, a Teacher for the Primary School to teach Tamil, English, Christianity Advanced Leval with THREE passes at one sitting Music vocal and instrumental additional qualifications Apply Principal.
(A-2107)

வடமராட்சி ஆரம்ப
சுகாதார நிலையங்கள்

தொடர்ந்தும் தொண்டர்களாக சேவையாற்ற விரும்புபவர்கள் தமது பெயர்களை எனது பணிமனையில் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறேன்.

டாக்டர் க. லலிதகுமார்,
சுகாதார வைத்திய அதிகாரி,
வடமராட்சி - பருத்தித்துறை.
[சி-0600]

AITKEN SPENCE INSURANCE (PTE) LTD,
Principal Agents for
## NATIONAL INSURANCE CORPORATION

வாகனம், ஆயுள், தீ, கொள்ளை, கடல் அபாயம் சுகாதாரம் போன்ற மற்றும் சகலவித காப்புறுதி தேவைகட்கும் உடனடி சேவையைப்பெற எம்மை நாடுங்கள்;
No. 192/1, Hospital Road, Jaffna.
(சி-0614)

## "தொழிற் பயிற்சிகள்"

தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலைமையை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் இலகுவாக வேலைவாய்ப்பு பெறக்கூடிய முறையில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

★ COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE.
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 750/-.

★ றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்.
ரெலிவிஷன், றேடியோ திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 750/-.

★ வீடியோ டெக் றிப்பியறிங்.
காலம்:- 2 மாதம். முழுக் கட்டணம்:- 600/-.

★ றீவைண்டிங்
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

★ எலெக்றிக்கல் வயறிங்,
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 2 மாதம். முழுக் கட்டணம்;- 500/-.

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 400/-.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் [ வார நாள் 31-08-87
வார இறுதி நாள் 30-08-87

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். 15 மாணவர் மட்டுமே ஒரு பயிற்சி வகுப்பில் சேர்க்கப்படுவர்.

விபரங்களிற்கு:-

## JAFFNA TECHNICAL INSTITUTE

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை), யாழ்ப்பாணம். | தபால்கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை), நெல்லியடி. | பிரதான வீதி, (பாமஸி அருகாமை), மானிப்பாய். | கண்டி வீதி. (யூனியன் பேக்கரி அருகாமை), சாவகச்சேரி. |

குறிப்பு:- கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 15-09-87ல் எமது நிறுவனத்தினால் மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சேர விரும்புவோர் மேற்குறித்த விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.
(ஏ-2108)

அறிவித்தல்
## இடமாற்றம்

தற்போது எமது ஸ்தாபனம்
மீண்டும் பழைய இடத்தில்
223, மின்சார நிலைய வீதியில்
இயங்குகின்றது என்பதை
வாடிக்கையாளர்கள். அன்பர்கள். ஆதரவாளர்க்கு
மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[எ-2093]

அறிவித்தல்
## இடமாற்றம்

எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்தில்
26-08-87 புதன்கிழமை தொடக்கம்
213-C, ஆஸ்பத்திரி வீதியில்
இயங்கும் என்பதை
வாடிக்கையாளர்கள், அன்பர்கள். ஆதரவாளர்க்கு
மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
(எமது ஸ்தாபனத்திற்கு வேறுகிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்)

நாதன் ஸ்ரோர்ஸ்,
213-C, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
[சி-0633]

கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில்
PROCESSING & PRINTING
நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

**கொழும்பு ஸ்ரூடியோ**
**55, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனம். ஏ2084



# Vacancy

Applications are invited from suitable persons for the post of Registrar, North Lanka Medical College. Applicants should be a Graduate of a recognised University with not less than ten years experience in Administration. Applications to be sent under registered cover on or before Wednesday 23rd September, 1987 to:

HONY. SECRETARY,
Board of Governors,
North Lanka Medical College,
Administration Block,
(A 2088) No. 164, Fourth Cross Street, Jaffna.



## சேவ்ரி ரவல்ஸ்

எமது யாழ்-கொழும்பு பஸ்சேவையை
27-08 87 நாளை முதல்
பிரயாணிகளின் நலன்கருதி

**வாரிவளவு (காரைநகர்) வரை**
**விஸ்தரித்துள்ளோம்**

என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விபரங்களை எமது ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்களில் அறிந்துகொளளலாம்.

**யாழ். ——> கொழும்பு**
**கொழும்பு > யாழ்.**

ஒருவழிக் கட்டணம் ரூபா 125/-

**சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனத்தார்**
102, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
[எ-2100]


# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
கிழமை: புதன்
திகதி: 10 [26 - 08 - 87)
நட்சத்திரம்: பூரம்
திதி: துதியை

மேடம்: வெளியிடத்துச் செய்தி நன்மைதரும். மாணவர்சள் வாழ்க்கையில் மகத்தான சம்பவங்கள் இடம் பெறும். பிதாவழிப் பிணியும் தீரும்.

இடபம்: பூமிப் பிணக்குத் தீரும். தொழில் பகிழ்ச்சியுண்டு. வாகன நலனுமுண்டாம்.

மிதுனம்: லாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள் குடும்பத்தில் குதூகலம் தோன்றும் பணபலமும் உண்டாம்

கடகம்: எதிர்பாராத விளைவுகள் அதிகரிக்கும். கழுகுட் பார்வை வட்டமிடும். கடமையிலும் தடைகள் தோன்றும்.

சிங்கம்: அவசரப் போக்கு ஆபத்தை விளைவிக்கும். வாழ்வும் பாழாய்ப் போகும். அதிக முதலீட்டைத்தவிர்க்கவும்.

கன்னி: மக்களால்மகிழ்ச்சி. புதுமையில் நாட்டம் தொழில் மகிழ்ச்சியுண்டு.

துலாம்: வீணன வார்த்தைகளால் மனது புண்படும் தானிய நஷ்டமுண்டு. சகோதர சஞ்சலமுண்டாம்.

விருச்சிகம்; பொதுப்பணியில் நாட்டம் நண்பர்களாலும் நன்மைகிடைக்கும் உள்ளத்திலும் உவகை துள்ளும்

தனுசு: புத்திரவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும். வரவிலும் திருப்தியுண்டு.

மகரம்: ஆயுதபீடையுண்டு வரவிலும்தடையுண்டு குடும்ப வாழ்விலும் பிழைகள் தோன்றும்.

கும்பம்: வாழ்வும் வளமாகும் காதல்சிட்டுக்கள்மகிழ்ச்சியடைவர். புதிய தொழில் சீர்பெறும்.

மீனம்- வியாபார மோசடி இடம்பெறும் விபத்திக்குமிடமுண்டாம். மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் ஆளாக நேரிடும்.

**வே. இரவீந்திரன்**
**திருமலை**

# இப்படியும் நடக்கிறது

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தச்சடம்பன் எனுமிடத்கில், நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் ஒன்று இருக்கிறது.

இங்கு உற்பத்கியாகும் 'ரோகு' எனும் மீனுக்கு இங்கு வந்துள்ள இந்திய சமாதானப் படையினர் மத்தியில் பெரும் மதிப்பு. (நம்மவர் வரவேற்பு மிகவும் கம்மிதான்.)

சுமார் ஒன்றரை அடி நீளமும் ஒன்றரைக் கிலோ நிறையும் கொண்ட இந்த மீனுக்கு ஏற்பட்ட திடீர் கிராக்கியினால், தினசரி நூற்றுஐம்பது கிலோ 'ரோகு' மீன் இந்திய சமாதானப் படையினருக்கு அனுப்பப்படுகிறது.

என்ன விஷயம் தெரியுமா? இந்த மீனின் தாயகமே இந்தியாதான்! அதாவது அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்குதான் இனவிருத்தி நடக்கிறது

**ஊடுருவி**


## இடமாற்றம்

கொழும்பு ஸ்ரூடியோ
ஸ்ரான்லி வீதி
**20-08-87 முதல்**

[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086


## அறிவித்தல்

### 1983ன் பின் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கான ஆலோசனைக்கூட்டம்

29-07-87 அன்று இலங்கை ஜனாதிபதிக்கும், இந்திய பிரதமமந்திரிக்கும் கைச்சாத்தான சமாதானஒப்பந்தத்தின் பிரகாரம் 1983 யூலைக்குப் பின் நடந்த இனக்கலவரத்தின் பிரதிபலிப்பாக தத்தமது வேலைகளை விட்டு இடம்பெயர்ந்து வந்த அரச, கூட்டுத்தாபன, தனியார் துறைஊழியர்களின் நிலைப்பாடுகளை ஆராயும் முகமாக எதிர்வரும் 6-9-87 (ஞாயிறு காலை 9-30 மணிக்கு நல்லூர் இந்துவிடுதியில் ஒரு கூட்டத்தை நடத்த, பாதிக்கப்பட்ட ஊழியரின் இணைப்புக்குழுவின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. ஆகவே, மேற்குறிப்பிட்டபடி 1983 யூலைக்குப்பின் இடம்பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு ஆலோசனை வழங்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**நிர்வாகசபை.**

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு,
95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி 0615)

## LANKA CEMENT LIMITED
### KANKESANTHURAI.

பொதிநிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT) துறைமுகத்திற்குக் (HARBOUR) சிமெந்து கொண்டுசெல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான

## கேள்விப் பத்திரம் (TENDER)

TENDER No. LCL/H/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது சீமெந்துத் தொழிற்சாலையின் பொதிநிரப்பும் பகுதியிலிருந்து (Packing Plant) துறைமுகத்திற்குக் (Harbour) சீமெந்து கொண்டு செலுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகிய வற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் (Tenders) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் (Tender Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலைநாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 29-08-87 சனக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப்பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 50/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 03-09-87 மாலை 4-00 மணிவரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 04-09-87 முற்பகல் 10 00மணிக்கு கேள்விப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

**பிரதிப் பொதுமுகாமையாளர்,**

**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**
**காங்கேசன்துறை.**

[சி-2095]

## வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு
## ஆட்டுக்கொட்டில்கள் அமைத்தல்

வல்வெட்டித்துறையின் பல்வேறு இடங்களில் உள்ளூர்க்கட்டிடப்பொருள்களை உபயோகித்து 50 ஆட்டுக் கொட்டில்களை அமைப்பதற்குக் கேள்விகள் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுசார்பில் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை ரூபா 25/- மட்டும் செலுத்தி எமது அலுவலகத்தில் 29-08-87வரைபெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 15-09-87 முற்பகல் 10-00 மணிக்குமுன் எமது அலுவலகத்தில் கிடைக்கத் தக்கதாக அனுப்பப்படவேண்டும்.

கேள்விகோரல் நடைமுறைகளுக்கு அமைவில்லாத எந்தக்கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை எங்களுக்குண்டு.

நேரடியாக அணுகவேண்டிய முகவரி:-

**Project Management Services Ltd,**
33, BROWN ROAD,
NEERAVIADY.
JAFFNA. [எ-2096]

வடக்கு, கிழக்கில்

# சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடந்த காலங்களில் இடம் பெற்ற ராணுவநடவடிக்கைகளினால் சேதமடைந்த பாடசாலைகள் வெகுவிரைவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விரிவான திட்டமொன்று வகுக்கப்பட்டு வருவதாக கல்விச்சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இப்பகுதிகளில் சேதமடைந்த சகல பாடசாலைகளின் விபரங்களையும் தமது அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் திரு ஜயதிலகா பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## காலிஜ்டைம்ஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை-இந்திய ஒப்பந்தம் குறித்து தாம் அளித்ததாகக் கூறப்படும் பேட்டியொன்றை மேற்கோள்காட்டி இந்தியப் பத்திரிகையொன்று வெளியிட்டுள்ள செய்தியின் சாராம்சத்தை பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். பிரதமர் அளித்ததாகக் கூறப்படும் பேட்டியின் சாராம்சம் உண்மையானதாவென சில செய்தி நிறுவனங்கள் செயலகத்திடம் வினவியுள்ளன. அகில இந்திய வானொலி தனது செய்தியில் குறித்த பேட்டி தொடர்பாக இந்தியப் பத்திரிகையில் வெளியான செய்தியை விரிவான முறையில் மேற்கோள் காட்டியிருந்தது. ஆனால் 'காலிஜ் டைம்ஸ்' பத்திரிகைக்கு பிரதமர் எந்தவிதமான பேட்டியும் அளிக்கவில்லை.

"மதிப்பு மிக்க பத்திரிகையொன்று செய்திகளை ஏனைய வட்டாரங்களிலிருந்து பெற்று பிரசுரிக்கும்போது, அவற்றை மேற்கோள்காட்டி அறிக்கைகள் விடும்போது அவை உண்மையானவையாவெனத் திரும்பத் திரும்ப சரிபார்த்துக் கொள்ளவேண்டும்

"சென்னையில் 1987 ஆகஸ்ட் 23-ல் இந்தியப் பத்திரிகையில் முற்பக்கத்தில் இலங்கைப் பிரதமர் பிரேமதாசா அமைச்சர் பதவியிலிருந்து வெளியேறவிருக்கிறார் என மற்றுமொரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதனையும் செயலகம் பொய்யெனத் தெரிவிப்பதுடன் தனது கவனத்துக்கும் எடுத்துக்கொண்டுள்ளது."

## அமிர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் 60வது பிறந்த தினத்தையொட்டி இன்று மூளாய் சித்தி விநாயகர் முத்துக்குமாரசுவாமி ஆலயங்களில் அபிஷேகம் ஆராதனைகள் நடத்தப்படவுள்ளது

மூளாய்ப் பகுதி மக்கள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

பல்கலைக்கழகத்தில்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் "இலங்கை-இந்திய இணக்கம் புறநிலைப் பரிமாணம்" என்னும் பொருள்பற்றி பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. அம்பலவாணர் சிவராசா இன்று உரையாற்ற இருக்கிறார்.

## இன்று சிவகுமாரன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காசி ஆனந்தன் திரு. கருணானந்தசிவம், செல்வி சிவாநிதி முத்துலிங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் சிறப்புரையாற்றுவார்கள்.

சிவகுமாரனின் புதிய சிலையை நிறுத்துவதற்கான பீடத்தை நிர்மாணிப்பதற்த அத்திபாரக் கல்லும் நாட்டப்படும்.

## மட்டுநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டோரில் பெருமளவு மக்கள் பூசா உட்பட பல்வேறு சிறைமுகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பெற்றோர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வூர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள்: "இந்திய அரசே! தடுப்புமுகாமில் தடுத்துவைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனே விடுதலை செய்! பத்து வருடங்கள் போராடிய தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு மக்கள் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் அதிகாரத்தைக்கொடு! இந்திய அரசே! ஏரு சில தமிழ் இளைஞர்களுக்கு காவல் புரிவதன் மூலம் தமிழ் இளைஞர்களைப் பிரித்துவைக்காதே! சகல ராணுவமுகாம்களும் மூடப்படவேண்டும்: ஆயுதக்கையளிப்பில் காட்டும் அக்கறையை தமிழ் இளைஞர்களின் விடுதலையில் காட்டாதது ஏன்? "இந்திய அரசே! உன் கபடநாடகம் இன்னும் எத்தனை நாளைக்கு?" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

## ஈழ. தே ஜ.

1ம் பக்கத் தொடர்ச்சி]

வது:-

"இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடந்துமுடிந்த ஒப்பந்தம் இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்குமிடையிலானதாகும் போராளிகள் அமைப்புக்களுக்கும், ஜே ஆருக்கும், ராஜீவுக்குமிடையில் இந்த ஒப்பந்தம் ஏற்படவில்லை.

"திம்பு, புதுடில்லி, கொழும்பு ஆகிய இடங்களில் மாறி மாறி இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலேயே ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

"இந்த நிலையில் பிற இயக்கங்கள் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை. தமிழர்விடுதலைக் கூட்டணி உட்பட எந்த இயக்கமும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

"ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட் ஆகிய நான்குஅமைப்புக்களும் சேர்ந்துஇந்த ஒப்பந்தத்திற்கு பலதிருத்தங்களை சமர்ப்பித்திருந்தது இத்திருத்தங்களை திரு. ராஜீவ்காந்தி ஏற்றுக்கொண்டபின்தான் ஒப்பந்தம் நடைமுறைக்கு வர ஆதரவு கொடுத்தோம்.

"ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழும் நிலை வரும்வரை இந்திய அமைதிப் படையினர் ஈழத்தில் தங்கியிருப்பார்களென்று திரு. ராஜீவ் காந்தி உத்தரவாதம் அளித்துள்ளார் ஆனால் இனிமேல் இயக்கங்களுக்கிடையே ஏற்படவுள்ள ஒற்றுமை தான் இந்தியஅமைதிப்படையினரை தாயகத்திற்குத்திருப்பி அனுப்பவழிவகுக்கவேண்டும்.

'திறிஸ்ரார்' என்றொருஇயக்கமோ, அமைப்போ சென்னையில் இருக்கவில்லை. ஈழத்திலும் இருக்கவில்லை எமது முன்னணியின் கொடியில் மூன்று நட்சத்திரங்கள் உண்டு. அம்மூன்று நட்சத்திரங்களும் இங்குவாழும் தமிழ், சிங்கள முஸ்லிம் ஆகிய மூன்று தேசிய இனங்களையுமே குறிக்கின்றன.

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் எமக்கும் இதுவரையும் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. அப்படி ஏதாவது முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் ஜனநாயக வழியில் எமக்குள்ளேயே பேசித்தீர்த்துக்கொள்ளுவோம்

"தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் பங்குண்டு. ஆயுதமேந்திய போராட்டம் கடந்த நான்கு ஆண்டு காலமாகவே இருந்தது. ஆனால் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம். 1956 58 களில் சாத்வீக வழியில் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. எனவே ஆயுதப் போராட்டம் ஒரு பகுதிப் போராட்டமாக இருந்து முழு விடுதலையையும் பூர்த்திசெய்ய மாட்டாது,

நாம் யாழ்ப்பாணம் வந்ததின் முழுநோக்கம் பாதிக்கப்பட்ட எம்முடைய மக்களுக்கு நிவாரண உதவிகளை எந்த வடிவத்தில் செய்யலாம். அது எந்த அளவுக்கு எம்மால் முடியும் என்பதை ஆய்வுசெய்யவே. இதற்காக மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் அலுவலகமொன்றையும் திறக்கவுள்ளோம்'

யாழ். குடாநாட்டில்

# மீன்பிடித் தடை நேற்றுடன் நீக்கப்பட்டது!

[கொழும்பு]

யாழ். குடாநாட்டிற்கு அப்பாலுள்ள கடல் பிராந்தியத்தில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த சகல கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் நேற்று நீக்கியுள்ளது.

முன்னர் விதிக்கப்பட்டிருந்த 3 மைல் தூரத்திற்கப்பால் வடக்கு கடலில் எந்தவொரு இடத்திலும் மீன்பிடிப்பதற்கான அனுமதியும் நேற்று முதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கடற்றொழிலாளர்கள் இனிமேல் சக்திவாய்ந்த இயந்திரப்படகுகளையும், கண்ணாடி இழையினாலான வள்ளங்களையும் பயன்படுத் வும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (சி)

## நிவாரண

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பருப்பு, தீப்பெட்டி, பாம் ஒயில், மண்ணெண்ணை ஆகியவை குடும்பத்தொகையின்படி வழங்கப்படுமென இம்மாதம் 10ம் திகதி தெரிவிக்கப்பட்டது.

திடீரென 12ம திகதி இந்திய நிவாரணப்பொருட்கள் சில கையிருப்பில் இல்லாமையினால் விநியோகம் பின்போடப்பட்டதாக யாழ். ப. நோ. கூ. சங்கம் அறிவித்தது. மீண்டும் இம்மாதம் 19-ம் திகதி பொருள் விநியோகிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அரிசி, மாவு மட்டும்முன்னர் அறிவிக்கப்பட்டது போல முழுத்தொகையும் வழங்கப்பட்டது பருப்பும், பாம் ஒயிலும் குறைவாகவே பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. மண்ணெண்ணை வண். தென். மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவுக்குள்ளடங்கும் பகுதிற்கு ஒரு லீற்றர் மட்டும் வழங்கப்பட்டது சீனி. பால்மா, தீப்பெட்டி எவருக்கும்வழங்கப்படவில்லை.

அரச களஞ்சியத்தில் சீனி. புளி. பால்மா. தீப்பெட்டி வழங்கப்படவில்லையென்றும் பாம் ஒயில், பருப்பு, மண்ணெண்ணை குறைவாகவேவழங்கப்பட்டதால் அதனையே பங்கீடு செய்ததாகவும் யாழ் ப நோ கூ ச சங்கம் வட்டாரங்கள் தெரிவித்தன

5 மாதங்கள் பொருளாதார தடையினால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டைச் சேர்ந்த எட்டரைலட்சம் மக்களுக்கும் இந்தியநிவாரணப் பொருள் கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலான மக்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்கவில்லை. சில பகுதிகளில் முற்றாகவே வழங்கப்படவில்லை. (சு)

வீதி ஒழுங்குமுறையில்

# இந்தியப் பொலிசார்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகர வீதி ஒழுங்குகளை அமுல்படுத்தும் பணியில் அடுத்த வாரம் முதல் இந்தியப் பொலிசார் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீதி ஒழுங்குகளை மேற்கொள்ள பொலிஸ் திணைக்களத்தில் தமிழ்ப் பொலிசாருக்குப் பற்றாக்குறை நிலவுவதாலேயே இந்திய பொலிசார் இக்கடமைகளைச் செய்யவுள்ளனராம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அறுநூறு பொலிசார் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## வடக்குக் கிழக்கில்

(9ம் பக்கம் பார்க்க)

கம் நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியிருந்த சிங்களவர்கள், இனப்பிரச்சனை காரணமாக அகதிகளாக வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

இதற்கமையவே தற்போது இவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை இப்பகுதியில் மீண்டும் சிங்களப்பாடசாலைகளை புனரமைப்பதுடன், பௌத்த விகாரைகளும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## காஞ்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கடந்த ஞாயிறு அதிகாலை காஞ்சி மடத்திலிருந்து கமண்டலத்தையும் தண்டத்தையும் விட்டு வெளியேறியிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டபோதிலும் அவரை எந்த இடத்திலும் எவரும் காணவில்லை. தற்போது காஞ்சி மடத்தில் நூற்றுக்கணக்கான பத்தர்கள் வந்து குழுமியுள்ளனர்!

பொலிசார் இவரைப் பல இடங்களிலும் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


கடைசி நேர வரிவிளம்பரம்

தவறிவிட்டது

க. இராசரட்ணம்என்ற பெயரைக் கொண்ட டென்மார்க் காசோலை 750/- டொலர் நேற்று [25-08-87] யாழ்ப்பாணத்துக்கும் கோண்டாவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. இராசரட்ணம், காளிகோவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் என்றவிலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சி-0641

தேவை

பாபு கேவி வீடியோ சென்ரரில் Cashier ஆகவேலை செய்வதற்கு G C. E (O/L) படித்த பெண் தேவை. 28-08-87 அன்று மாலை 3-30 மணிக்கு நேரில்வரவும். 50, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். சி-0635

முக்கிய அறிவித்தல்

The Vino's Electronics

நெல்லியடியில் .....

எமது ஸ்தாபனம் கடந்தகால தாக்குதல்களால் முற்றாகச் சேதமடைந்துள்ளது. எனவே இவ்விஸ்தாபனத்தில் பழுதுபார்ப்பதற்காக றேடியோ. Tape recordors, T. V. மற்றும் மின்சார உபகரணங்களை கொடுத்த வாடிக்கையாளர்கள் தயவுசெய்து உங்களுக்கு வழங்கப்பட்ட ரசீதுடன் 29-08-87 ஐற்கு முன்பாக கீழ்க்காணும் முகவரியுடன் நேரடியில் தொடர்பு கொள்ளவும்.

உரிமையாளர்,
THE VINO'S ELECTRONICS,
மத்திய மகாவித்தியாலய வீதி,
நெல்லியடி. [சி-0636]

தேவை

இரும்புப்பொருள்கள், மின்சாரப் பொருள்கள் கொண்ட புதிய கடை ஒன்றிற்கு கொள்முதல், விற்பனை, நிர்வகித்தல் ஆகியனவற்றில் மிகக்கூடுதலான அனுபவம் கொண்ட ஒருவர் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

மிது வீடியோ மூவிஸ்,
பிரதான வீதி, சித்தங்கேணி.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 26-8-87

# மக்களுக்கு அமைதி கிடைக்கவே ஆயுதங்களை ஒப்படைத்தோம்

## கிளிநொச்சி கூட்டத்தில் ஈ.என்.டி.எல்.எவ் தலைவர் உரை

[கிளிநொச்சி]

"எமது "ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி" இயக்கமானது வேறு எந்த இயக்கத்திற்கோ அல்லது இனத்திற்கோ எதிரானதல்ல. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாம் எமது மக்களுக்கு அமைதியும் சமாதானமும் கிடைக்கவேண்டுமென்பதற்காகவே ஆயுதங்களை இந்திய அமைதி காப்புப் படையிடம் ஒப்படைத்தோம். ஆனால் எமக்கும் எமது மக்களுக்கும் எவரேனும் வன்முறைமூலம் இடைஞ்சல் தருவார்களானால் அவற்றை எதிர்கொள்ளவும் தயாராகவே இருக்கின்றோம்".

இவ்வாறு கடந்த 24ம் திகதி மாலை கிளிநொச்சி நகரில் நடந்த ஐயாயிரத்திற்குமதிகமான மக்கள் திரண்டிருந்த மாபெரும் கூட்டத்தில் பேசும்போது ஈழதே ஜ. வி. முன்னணி [ENDLF] தலைவர் ராஜன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"பயமுறுத்தல்களையெல்லாம் மீறி இங்கே மக்கள் ஆயிரக்கணக்காகத் திரண்டிருக்கின்றார்கள். இந்த மக்கள் சக்தியை நம்பித்தான் நாம் எமது மக்களுக்குச் சேவை செய்யவும் அழிந்து கிடக்கும் நமது தாயகத்தைப் புனர் நிர்மாணம் செய்வதற்கும் முன்வந்திருக்கின்றோம். அரசியல் அதிகாரத்தைத் தேடியோ அல்லது ஆயுதமுனையில் மக்களைப் பயமுறுத்தி ஆள்வதற்கோ வரவில்லை. இந்த வன்னிப் பிரதேசம் இன்று போரின் காரணமாக மிகவும் சீர்குலைந்துள்ளது. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சி தாண்டவமாடுகிறது. இதற்காக எமது முரண்பாடுகளையெல்லாம் மறந்து உடனடியாக நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டும். அதனால்தான் நாம் எமது இயக்க இளைஞர்களை ஒருபுனர் நிர்மாணப் படையாக மாற்றி வருகின்றோம் இந்தப் பணி நிறைவேறிய பின் தேசத்தின் அபிவிருத்திப் பணிகளில் எங்கள் இயக்கம் ஈடுபடும்" என்றார்.

திரு. தெய்வேந்திரம் ஆசிரியர் தலைமைதாங்கிய இக்கூட்டத்திற்குப் பரந்தன், மல்லாவி, முல்லைத்தீவு ஆனையிறவு, முருகண்டி, இரணைமடு, வட்டக்கச்சி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலிருந்தெல்லாம் மக்கள் சமுகமளித்திருந்தனர்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளரும், இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளிற் கலந்துகொண்டவருமான திரு கனகராஜன் பேசும்போது, நாம் எந்த அரசாங்கத்துடனும் பேராளிகள் சார்பாக எதுவித உடன்படிக்கையிலும் கையொப்பமிடவில்லை. மக்களைக் காட்டிக்கொடுக்கவுமில்லை.

அப்படி எவரும்கூறுவார்களானால் அது மக்களைத் திசைதிருப்புவதாகும் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசும்போது நாம் இந்திய அரசின் அதிகாரிகளிடமும், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியிடமும்உறுதிமொழிகளை நேரடியாகப் பெற்றபின்னரே இந்த ஒப்பந்தத்திற்கு சம்மதம்தெரிவித்தோம். நாம்எந்தக் காலத்திலும் கொழும்பில் ஆட்சிக்கு வரும்கட்சிகளையோ தலைவர்களையோ அல்லது இலங்கை ராணுவத்தை நம்பியோ பேச்சுவார்த்தைக்கு வரவில்லை முழுக்கமுழுக்க இந்தியஅரசை நம்பியே சம்மதம் தெரிவிக்கின்றோம். இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்துவதை இந்திய அரசு மேற்பார்வை செய்யும் என்ற உறுதிமொழியும் தரப்பட்டதனாலேயே ஏற்றுக் கொள்கின்றோம். நாம்ஆயுதங்களை ஒப்படைத்த பின் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது வேறு எவ்விதத்திலாவது தமிழீழமக்களுக்கு இன்னல்கள் நேர்ந்தால் அந்த விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும் இந்திய அரசே ஏற்கவேண்டும் என்று கூறிசம்மதம்பெற்ற பின்னரே ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டோம்" என்றார்

ஈழ தே ஜ வி முன்னணி அமைப்பாளர் திரு. மனோ மாஸ்டர் பேசும்போது நாம் இந்திய அரசைநம்பியே ஆயுதங்களைஒப்படைத்துள்ளோம். நிலைமை சுமுகமாகாவிட்டால் அல்லது எமது மக்களும் உடமைகளும் அழிவுக்கு உட்பட்டால் மீண்டும் நாம் எமது போராட்டத்தை முன்னெடுப்பதை எவராலும் தடுக்க முடியாது" என்றார்.

திரு. தெய்வேந்திரம் ஆசிரியர் தமது தலைமையுரையில் நாம் தேர்தலை நோக்கமாகக் கொண்டு இக்கூட்டத்தை நடத்தவில்லை. தேர்தலில் போட்டியிடவேண்டுமென்று கூட தீர்மானிக்கவில்லை. எமது அடுத்த கட்ட நடவடிக்கையாக எமது மக்களைக் கிராமம் கிராமமயாகச் சந்திக்கஇருக்கின்றோம். மக்களின்கருத்துக்களைக கேட்ட பின்னர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அடுத்த கட்ட வேலைகளை மக்கள் ஒத்துழைப்புடன் திட்டமிட உள்ளோம். எமது பிரதேசத்தைச் செல்வம் கொழிக்கச்செய்வதே எமது உடனடி பணியும் நோக்கமுமாகும் என்றார்

ஈழ தே ஜ வி முன்னணிக்கெதிராக அவதூறான பிரசாரம் செய்யப்படுவதாகக்கூறி கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது

திருவாளர்கள் ரொபட், திரு (டெலோ) ஆகியோரும் பேசினார்கள். திரு. சூரியமூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

## ஸ்கொட்லாந்து அதிகாரிகள் தீவிரவிசாரணை

(கொழும்பு)

ஸ்கொட்லாந்து புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்று இலங்கை குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சகிதம் குண்டு வெடிப்பு இடம்பெற்ற பாராளமன்ற அறையைச் சென்று பார்வையிட்டனர்.

புதிய விசாரணைகளைத் தொடர்ந்து குண்டுவெடிப்புத் தொடர்பாக துப்புத்துலக்கப் படுமெனநம்பப்படுகிறது

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேந்திரம் சின்னம்மா

வண்ணார்பண்ணை கலட்டியைச் சேர்ந்த மு. நாகேந்திரம் அவர்களின் அன்பு மனைவி நா. சின்னம்மா அவர்கள் 25-8 87 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார் இவர்க மனோன்மணி, நா. மாணிக்கராசா (பாறெயின் நா. தெய்வேந்திரம் பிரான்ஸ்], நா. இராசேந்திரம் [பிரான்ஸ்], ஆ. மகாலெட்சுமி [பிரான்ஸ்], நா ஜெயராணி [பிரான்ஸ்], ச மனோராணி ஆகியோரின்தாயாரும், செ கந்தசாமி, செ ஆனந்தம். சி சந்திரலிங்கம், சி. ஜெயராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் அம்பகர் வீதி, கொக்குவில் இல்லத்தில் இருந்து 26-8-87 (இன்று) புதன்கிழமை காலை 11 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் கணக்கமரத்தடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: செ கந்தசாமி,
அம்பகர் வீதி, கொக்குவில்.

[சி-0628]

### திருமதி இராசமணி யேசுதாசன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இராசமணி யேசுதாசன் காலமானார். அன்னார் இளைப்பாறிய தபால் அதிபர் காலஞ்சென்ற திரு எட்வின் யேசுதாசனின் அன்பு மனைவியும், திருமதி இராஜேஸ்வரி திருச்செல்வம் [நியூசிலாந்து], டாக்டர் கனகேஸ்வரி ஹன்ட் [Hunt] [இங்கிலாந்து], டாக்டர் மகேஸ்வரி அருள்செல்வம் [பேராதனைப் பல்கலைக்கழகம்], தவராஜன் [நைஜீரியா], டாக்டர் செல்வராஜன் [இங்கிலாந்து], திருமதி விமலேஸ்வரி குணசீலன் கன்னியர்மடம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்], மனோராஜன் [இங்கிலாந்து], திருமதி மகிழ்மணி அரசரத்தினம் [இங்கிலாந்து] ஆகியோரின் தாயாரும், திருச்செல்வம், டாக்டர் ஏானஸ்ட் ஹன்ட், காலம் சென்ற அருள்செல்வம் சந்திரா, சரோஜினி, குணசீலன் [இளைப்பாறிய அதிபர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்], ஜெயந்தி, யோகேந்திரன் அரசரத்தினம் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-08-87 பி. ப; 4-00 மணிக்கு பம்பலப்பிட்டி அரசாங்க மாடி வீடு A இரண்டாம் இலக்க வீட்டில் நடைபெறும்.

[சி-0643]

### திருமதி யோகேஸ்வரி சுந்தரமூர்த்தி

திருமதி யோகேஸ்வரி சுந்தரமூர்த்தி மேற்கு ஜெர்மனி பிரிமனில் 22-08-87 அன்று காலமானார். அன்னார் கொட்டாஞ்சேனை B 2/7 புளூமெண்டல் மாடிவீடு கொழும்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபால் அதிபர் மாணிக்கம் சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம், அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி கமலப்பா, சிவானந்தன், சண்முகநாதன் ஆகியோரதும், விசுவநாதன் [டோகா] அவர்களதும் அன்புச்சகோதரியும், ரவீந்திரமூர்த்தி [கனடா] மகேந்திரமூர்த்தி [ஜெர்மனி] யோகேந்திரன், பாலேந்திரன் [சவுதி அரேபியா], குணேந்திரன் [ஜெர்மனி], விஜேந்திரன் [கனடா], நிரஞ்சலா, தேவேந்திரன் [இங்கிலாந்து], சசிகலா [ஜெர்மனி] ஆகியோரது அன்புத் தாயாரும், யோகேஸ்வரி [கனடா], கமலாம்பிகை [ஜெர்மனி], மீனலோஜினி [ஜெர்மனி] கமலேஸ்வரி கேதீஸ்வரி [நல்லூர்], சச்சுதீன் [பலாங்கொடை] ஆகியோரது மாமியாரும், ரவிபிரதாப் [கண்ணன்] ரவிபிரியா [கனடா], அனுசுயன் [ஜெர்மனி] துவாரகா, பவப்பிரியா, அனுப்பிரியா, காங்காசுதன், பிந்து ஹாசினி [ஜெர்மனி] நிரோசா ஆகியோர்களது அன்புப் பாட்டியுமாவார் அன்னாரின் பூதவுடல் ஜெர்மனியில் தகனம்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவாகளும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

(சி 0620)

## யாழ் மாவட்டத்தில் இடமாற்றம் பெற்றுள்ள கிராமசேவை அலுவலர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் செப்டம்பர் முதலாம் திகதிமுதல் இடமாற்றம் பெற்றுள்ள கிராமசேவை அலுவலர்கள் விபரம் வருமாறு; இவர்களில் சிலர் விசேடசேவை அலுவலர்களாகக் கடமையாற்றியபின், கிராமசேவை அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களாகும்.

| பெயர் | தற்போதைய இடம் | புதியஇடம் |
|---|---|---|
| ஏ. தனபாலசிங்கம் | உடுவில் | நெடுந்தீவு |
| வி. நடராசா | நெடுந்தீவு. ம | நெடுந்தீவு மேற்கு |
| என். நடராசா | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழ |
| ரி. பாலசிங்கம் | வேலணை | நயினாதீவு தெற்கு |
| எஸ். சச்சிதானந்தம் | வேலணை | புங்குடுதீவ வ/மே |
| எஸ். இரணைகுமாரன் | சரவணை | புங்குடுதீவு வட |
| ஆர். வைத்திலிங்கம் | புங்குடுதீவு | புங்குடுதீவு தெ/மே |
| கே. சந்திரா | வேலணை | புங்குடு தீவு தெற்கு |
| என் கதிரேசன் | வேலணை | புங்குடுதீவு தெ/கி |
| எம் அம்பிகைபாகன் | வேலணை | புங்குடுதீவு வ/கி |

## பத்தமேனி இடைக்காடு: 245 வீடுகள் சேதம்

[அச்சுவேலி]

"வளலாய், இடைக்காடு, தம்பாலை, பத்தமேனிப் பகுதியில் 245 வீடுகள் முற்றாக சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 16 வீடுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன. 135 வீடுகள் அரைகுறைச் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன.

பத்தமேனி - இடைக்காடு பிரஜைகள்குழு தமதுபகுதியில் இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட சேதம்பற்றி நேரில் பார்வையிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. என். இராசேந்திரன் செயலாளர் திரு. கே. ஆறுமுகசாமி (சமாதான நீதிபதி) ஆகியோர் தயாரித்து வெளியிட்ட சேதம் தொடர்பான அறிக்கையில்; "50 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீர்ப்பாசனம்செய்ய முடியாத அளவிற்கும், தொடர்ந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத அளவிற்கும் முற்றாக சேதப்படுத்தப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்காலிக பொலிஸ்நிலையம்

யாழ்ப்பாணம், புதன் யாழ் பொலிஸ் நிலைய கட்டட திருத்தவேலைகள் முடியும் வரை தற்காலிகமாக யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு நேற்றுமுதல் சில பொறுப்புகளுடன் இயங்குகிறது

பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். செல்லத்துரையின் பொறுப்பின்கீழ் இயங்கிவரும் இப்பிரிவில் விபத்து, கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களுக்கான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (கு)

## லலித்தை ஜனாதிபதி பார்வையிட்டார்

[கொழும்பு]

ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியைச் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

## இடைக்காடு மகாவித்தியாலயம்

[அச்சுவேலி]

இடைக்காடு மகாவித்தியாலயம் இன்று புதன்கிழமை தொடக்கம் பழைய இடத்தில் மூன்றாம் தவணைக்காக திறக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.